

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா(து) இருக்கப் பெறின்.**

**பொருள் :** படித்தவர் சபைமுன் பேசாது இருந்தால் படியாதவரும் மிக நல்லவராகக் கொள்ளப்படுவர். (403)

**கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**

**பொருள் :** நூல்களைக் கல்லாதவனது இயற்கை அறிவு மிக நன்றாயிருப்பினும் அறிவுடையோர் அதனை ஏற்றுக் கொள்ளார். (404)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## இலங்கை என் திருநாடு



பொறிவழிபோ யலையாமற் பூவுலகிற் காத்தபிரான்
அறிவுக் கறிவானான் ஆரணமு மறியகில்லான்
குறிகுணங்க ளற்றவொன்றைக் கும்பிடுவோ மெப்போதும்
செறிபொழில்சூ ழிலங்கையே சிறியேன்றன் திருநாடே. 04

முற்றாத பின்மதியம் முடிதனிலே வைத்தபிரான்
அற்றார்க்கு மல்ர்ந்தார்க்கு மருள்புரியு மம்பலவன்
நற்றாம ரைப்பாதம் நாள்தோறுங் கைதொழுவார்
வற்றாத வளஞ்செறியு மிலங்கையென் திருநாடே. 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 324

2024 **பொருளடக்கம்** மார்கழி


| | | |
|---|---|---|
| தூண்டாமணி விளக்கில்... | இராம ஜெயபாலன் | 01 - 06 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 07 - 11 |
| தமிழகத்தை ஈழநாட்டுக்குக்... | கே.எஸ். சிவஞானராஜா | 12 - 15 |
| இறைவன் உயிரினங்களை... | பு. கதிரித்தம்பி | 16 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| சமயம் காட்டும் உயர்நெறி | கு. சோமசுந்தரம் | 20 - 21 |
| திருவாதவூரரும் இறை பணியும் | செ. சிவபாதம் | 22 - 25 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 26 - 28 |
| இந்து மத ஆதாரம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 29 - 30 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 31 - 33 |
| மௌனமாக இருப்பதும்... | இணையம் | 34 - 36 |
| "சாதனைத் தமிழன்" விருது... | ச. லலீசன் | 37 - 39 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 40 - 51 |
| சமுதாயப் பணிகள் | தொகுப்பு | 52 - 60 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# கார்த்திகை மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

மூத்த பத்திரிகையாளரும், பத்திரிகைத் துறையில் ஆழ்ந்த அனுபவங்களும் உள்ளவரும், சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாட்டை நன்கு அறிந்தவருமாகிய திரு சி. தில்லைநாதன் அவர்கள் 323ஆவது மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றினார்கள்.

அவர் தனது உரையின்மூலம் ஆச்சிரமம் ஆரம்ப காலங்களில் இருந்து ஆற்றிக்கொண்டிருக்கும் பணிகளின் தன்மைபற்றியும் அதற்காக ஆச்சிரம சுவாமி அவர்களின் அர்ப்பணிப்புடனான முயற்சி பற்றியும் தான் அறிந்ததுமான ஒரு சில நிகழ்வுகளையும் சபையில் உள்ளோர்க்கு விளக்கிக் கூறினார்.



மேற்கொண்டு கூறுகையில் தான் அறிந்த வரையில் ஒரு ஆன்மீகம் சார்ந்த பத்திரிகை அதுவும் யாழ்ப்பாணத்தில் 323 மாத காலம் தொடராக வெளிவருவது என்பது ஒரு வியக்கத்தக்க விடயம். இம் மலர் வெளிவருவதன் ஊடாக எத்தனை விதமான எழுத்தாளர்களை உள்வாங்கி அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும் ஒரு ஆவனமாக மிளிர்கின்றது. இம் மலர் தொடர்ந்தும் வெளிவர சந்நிதிவேற் பெருமானை வேண்டி நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுரை:**

கார்த்திகை மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையை சந்நிதியான் ஆச்சிரம செயற்பாட்டு குழுவில் ஒருவருமாகியவரும், சைவப்புலவரும், அதிபருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் ஆற்றினார்கள்.

ஒரு மலரை நாம் வெளியிடுவது என்பது எத்தனையோ சிரமங்களை எதிர்கொண்டு அது சம்பந்தமாக பலரது கருத்துக்களையும் உள்வாங்கி குறித்த திகதியில் வெளியிடவும் முடியாமலும் மிகுந்த பிரயாசைப்பட்டுத்தான் அவ் வெளியீட்டை செய்யக்கூடியதாக இருக்கின்றது.

இதனைக் கருத்தில்கொண்டு ஞானச்சுடர் மலர் வெளியீட்டை நோக்குமிடத்து ஒரு வியப்பாகவே இருக்கின்றது. குறித்த காலத்தில் ஒருவித தடங்களுமின்றி தொடராக வெளிவருவது முருகனின் கருணை என்றுதான் கூறவேண்டும். மலர் வெளியீடுகூட எவ்வித ஆடம்பரங்களுமின்றி அடக்கமாக வெளிவருவது ஒரு சாதனைதான் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஒருசில கட்டுரைகளின் கருத்தாளத்தை சபையில் உள்ளோர்க்கு விளக்கிக்கூறி நிறைவு செய்தார்.



அதனைத் தொடர்ந்து சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வுடன் அன்றைய நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

## என்றும் நினைவில்...

எமது பிரதேசம் இனம், மொழி, சமயம் என்ற கொள்கையை நிலைநிறுத்தி, வர்த்தகராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் நாட்டிற்கு சேவை ஆற்றிய முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் திரு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் மகோன்னதமானவர்.

அந்த வகையில் அமரர் மகேஸ்வரன் தனது ஆரம்ப காலங்களில் வர்த்தகராக பரிணமித்துக் கொண்டிருந்தவேளை வியாபார நோக்கத்திற்குரியவராகச் செயற்பட்டாலும், பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்றவுடன் அவரது வியாபார நோக்கம் அடியோடு அற்றுப்போய் சமூக சமய சேவை அடிப்படையில் அவரது மனம் மாற்றமடைந்ததன்மூலம் பலவித நன்மைகள் யாழ் குடாநாட்டு மக்களுக்கு கிடைக்கப்பெற்றது. குறிப்பாக யாழ் குடா நாட்டு ஆலயங்களும் ஆலயம் சார்ந்த சபைகளும் ஏதோ ஒரு வகையில் அவரால் பயனடைந்தது என்பதில் மிகை இல்லை.



அமரர் அவர்கள் இருந்த காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தின்மீது கொண்ட பற்று காரணத்தால் சுவாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தனது கப்பல்மூலம் அத்தியாவசியமான பொருட்களை ஆச்சிரமத்துக்கு அனுப்பி அதற்கு அமைவாக ஆச்சிரமம் ஆற்றும் நித்திய அன்னப்பணி தொடக்கம் மற்றும் பல பணிகளுக்கு உந்துசக்தியாக அமைந்தார்.

அமரர் மகேஸ்வரன் மறைந்த 17 ஆண்டுகள் நிறைவடைந்தாலும் அவர் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகளை சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் நிலை நிறுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)

**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)

**சி. முஜிபன்**
(இணுவில்)

**செல்வி க. பாமதி**
(கொக்குவில்)

**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)

**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)

**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)

**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)

**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

**சி. தில்லைமணி**
(வட்டுக்கோட்டை)

**வ. அப்புத்துரை**
(வல்வெட்டித்துறை)

**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)

**ச. தமிழ்ச்செல்வம்**
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)

**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)

**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**வ. துரைராசலிங்கம்**
(சுண்ணாகம் கிழக்கு)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**T. நாகராஜா**
(கரந்தன், நீர்வேலி)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**பொ. சந்திரமோகன்**
(யாழ்ப்பாணம்)
**சி. நிலையினார்**
(இடைக்குறிச்சி, வரணி)
**இராஜேந்திரம் கஜீபன்**
(சண்டிலிப்பாய்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாலசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**வனிதன் வெனுஜன்**
(கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. இரத்தினசபாபதி**
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**சோம சூரியசிங்கம்**
(கோண்டாவில்)
**S.R. சரவணபவன்**
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
**க. வாமதேவன்**
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
**திருமதி ச. செல்வறஞ்சனா**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. மனோகரன்**
(மாதா கோயிலடி, கோப்பாய்)
**த. ஜெயவதனா**
(அல்வாய்)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
**த. சுகந்தன்**
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
**சி. சோமகுலசேகரம்**
(கரவெட்டி)
**சி. சரவணப்பெருமாள்**
(மாணிக்கவளவு, கரணவாய்)
**சிவலிங்கம் தேவமலர்**
(அச்சுவேலி)
**S. கணேசமூர்த்தி**
(கெருடாவில், தொண்டைமானாறு)
**S. சத்தியமூர்த்தி**
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
**சு. சிவலிங்கம்**
(குகன்குடிசை, பொலிகண்டி)
**திருமதி. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**ம. கருணாநிதி**
(நல்லூர்)
அன்புமலர் சிதம்பரநாதன்
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. முருகானந்தன்**
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
**செ. அரியானந்தம்**
(காங்கேசந்துறை)
**செ. இராசதுரை**
(வட்டுக்கோட்டை)
**இ. பாஸ்கரன்**
(சுதுமலை வடக்கு)
**N. குணரெட்ணம்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**V. சிவனேசன்**
(கமலை, மானிப்பாய் வீதி)
**சே. புலேந்திரன்**
(நீர்வேலி)
**இ. நடராசா**
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
**பொ. செல்வகிருஷ்ணன்**
(புலோலி தெற்கு, புலோலி)
**சி. சிவசுப்பிரமணியம்**
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
**அ. பரமநாதன்**
(தெல்லிப்பழை)
**திருமதி கமலா குணரெத்தினம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி சத்தியவாணி நந்தகுமார்**
(நவாலி, மானிப்பாய்)
**கந்தையா செல்வக்குமார்**
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
**திருமதி அன்னலெட்சுமி**
(சங்கானை)
**வி. சிற்றம்பலம்**
(மாதகல்)
**சோமசுந்தரம் செல்வசுந்தரம்**
(மீசாலை கிழக்கு)
**ஏகாம்பரம் சந்திரா**
(பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டாமணி விளக்கில் துலங்கும் ஞானச்சுடர்

– *திரு இராம ஜெயபாலன்* அவர்கள் –

ஒரு சிறந்த இலக்கியம் பல அங்கங்களைக் கொண்டதாக விளங்கும். முக்கியமாக வித்தாகக் கருப்பொருள் இருக்கும். சத்தாகக் கற்பனை வளங்கள் இருக்கும். ஆய்வு இலக்கியமானால் சான்றாதாரங்கள் இருக்கும். தவிர இலக்கியம் என்பது இலக்கு நோக்கி நகர்வதால் இலக்கு இருக்கும். இவற்றுக்கு மேலதிகமாக இலட்சினை (முத்திரை) இருந்தால் அதுவே சிறந்த இலக்கியமாகும். என்னால் ஞானச்சுடர் சஞ்சிகைக்கு எழுதி வெளிவந்த கவிதைகளுக்கு மேலதிக விளக்கமாகவே கட்டுரைகள் அமைவதால் பின்வரும் கவிதையே இலட்சினை (முத்திரை)யாக அமைகின்றது.

**கலாநிதிப் பட்டம்**

அண்டத்தில் விளங்கும் அகண்டு
ஒடுங்கும் அற்புத ஒளியாய்
தூண்டாமணி விளக்கில் துலங்கும்
ஞானச்சுடராய் அருள்புரிய
தொண்டைமானாறு ஆச்சிரம சைவ
கலை பண்பாட்டுப் பேரவை
கொண்ட பெரும் புகழதே கலாநிதிப்
பட்டம் வென்ற மோகன தாஸ்சுவாமி!

*-இராம ஜெயபாலன்- (241ஆவது மலர்)*

திருமூலருடைய பின்வரும் பாடலும் உவமானமாக வந்தென்னை யாண்ட மணி விளக்கானவன் என்ற வரியும் இந்தக் கட்டுரைக்கு இலட்சனை (முத்திரை)யாகவும் அமைகின்றது.

சந்திரன் பாம் பொடுஞ் சூடும் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியுமில்லா அரும் பொருள்
சிந்தையில் மேவித் தியக்கறுத் தானே!

-திருமந்திரம்.

திருமூலருடைய மேற்படி பாடல் ஏற்கனவே ஞானச்சுடர் சஞ்சிகையில் எழுதி வெளிவந்த அடியும் முடியும் என்ற கட்டுரையில் ஆராயப்பட்டு இருந்தாலும்கூட, வந்தென்னை யாண்ட மணிவிளக்கானவன் என்ற வரிகள் தனித்துவமாகவே ஆராயப்பட வேண்டியிருப்பதால்,

*உன்னைத் தவிர உனக்கு வேறு யாரும் அமைதியைத் தர இயலாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் மறைத்து வைத்துப் பாடியுள்ள பெரு வெடிப்புக் கோட்பாடுகளைத் தனிக் கட்டுரையில் பின்னர் பார்ப்போம். என்று கூறியதற்கமைவாக இந்தக் கட்டுரையும் அடியும் முடியும் என்ற கட்டுரைக்கு தொடர்ச்சியாகவே அமைகின்றது.

ஞானம் என்றால் என்ன? என்று முதலில் ஆராய்ந்தால், மறை பொருள் அறிவே ஞானமாகும். மேலும் ஞானம் என்றால் மொழி கடந்த உணர்வு என்பதால் ஞானத்திற்கு மௌனம் என்றொரு பொருளும் உண்டு. இவ்வாறு ஞானம் என்பது பொருள்பட்டாலும்கூட, சித்தர்கள் மொழி மூலமும் ஞானத்தைப் போதித்தும் இருக்கின்றார்கள். அதாவது குறைந்த சொற்களிலேயே நிறைவான பொருள் தரும்படியும் மறையாற்றல்கள் விளங்கும்படியும் ஞானத்தைப் போதித்திருப்பதால் இவை மந்திரங்களாகவும் போற்றப்படுகின்றது.

மொழியிலே வாயைத் திறந்தவுடன் வருகின்ற ஓசை "ஆ" என்ற சொல்லாகும். இது வியப்புக் குறியையும், திறந்தது என்ற பொருளையும் தருகின்றது. மீண்டும் வாயை மூடியவுடன் வருகின்ற ஓசை "ஆம்" என்ற சொல்லாகும். இது நிறைவையும் ஆமோதித்தலையும் குறிக்கும். ஆனால் "ஆம்" என்ற ஓசை குறுகிய ஓசையைத் தருவதால் அருகில் இருப்பவர்க்கே புரியும்படியாகப் பதில் அளிக்கக்கூடியதாக இருப்பதால் ஓசையை உயர்த்துவதற்கு பயன்பட்ட சொல்லே "ஓம்" ஆகும். இதனால் "ஆ" என்றால் திறந்தது என்று பொருள்படுவதுபோல் "ஓ" என்றால் விரிந்தது என்றும் பொருள்படும் படியாகவும் ஓம் என்றால் நிறைவானதாகவும் ஆமோதித்தலைக் குறிப்பதாகவும் அமைகின்றது. மேலும் "ஆ" என்ற சொல்லை அடியொற்றியே ஆகாயம் என்ற சொல் உருவானமையால் ஓ என்ற சொல்லை அடியொற்றியே, ஓங்காரம் (பிரபஞ்சம்) என்ற சொல்லும் உருவானது. மேலும் ஓ என்ற எழுத்து மண்டையோட்டின் வடிவில் அமைந்ததால் மனித சிரசைக் குறிப்பதாகவும் "ஓம்" என்றால் உடல் முழுமையையும் குறிப்பதாகவும் அமைகின்றது. தவிர தமிழில் உள்ள "ழ" என்ற எழுத்தின் அடிப்பாகத்தை வடிவமாகக் கொண்டு உருவானமையால் ஓ என்றால் சிரசையும் "ழ" என்றால் உடலின் கீழ்ப் பகுதியைக் குறிப்பதாகவும் அமைவதால் இதைக் கெட்ட வார்த்தையாகவும் பயன்படுத்தவும் பட்டாலும் முழுமை என்பதே இதன் பொருளாகும்.

எனவே "ஆ" என்றால் திறந்தது என்றும் "ஓ" என்றால் விரிந்தது என்றும் பொருள் படுவதால் ஆகாயம் என்கின்ற பிரபஞ்சம் ஒடுங்கி விரியக்கூடியது என்று மொழிக்கூடாகவே அறிவியல் ஞானம் எமக்கு கிடைக்கின்றது. மேலும் தூண்டாமணி விளக்கின் அமைப்பும் மனித மண்டையின் அமைப்பில் இருப்பதால் ஓம் என்னும் பிரணவ மந்திரமும் தூண்டாமணி விளக்கில் அடங்கியும் இருக்கின்றது. ஔவைப் பிராட்டியின் பின்வரும் (ஔவைக்குறள் 63) பாடலில் விளக்கம் கிடைக்கின்றது.

ஓங்காரமான கலசத்து அமிர்து
உண்ணின் போங்காலமில்லை புரிந்து.

ஓங்கார மந்திரம் என்றே அறியப்பட்ட ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை ஔவைப் பிராட்டி ஓங்காரமான கலசத்து அமிர்து எனச் சொல்வது எமது சிரசையும் குறிப்பதாகவும் உள்ளது. தூண்டாமணி விளக்கையும் குறிப்பதாகவும் உள்ளது. எனவே நான் ஏதோ

***ஓவ்வோர் இன்பத்திற்கும் ஓர் துன்பம் உண்டு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் வந்ததையெல்லாம் சொல்லவில்லை என்பதற்கு ஆதாரம் கிடைக்கின்றது. மேலும் பஞ்சபூதங்களில் ஆகாயம் தனித்து இருக்கும்போது ஒடுங்கிய நிலையிலும் பஞ்சபூதங்களும் இணைந்து இயங்குகின்றபோதே பிரபஞ்சமாக விரிவடைந்து இயங்கினாலும் இந்தப் பிரபஞ்சம் பல அண்டங்களாக பல்வேறு ஞாயிற்றுத் தொகுதிகளாக இருப்பதால் ஏற்படும் வான வேடிக்கைகளே பெருவெடிப்புக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகின்றது., இந்த ஒடுங்கி விரியும் பிரபஞ்ச இயல்பை தொழில்நுட்பமாகக் கொண்டே தூண்டாமணி விளக்கும் இயங்கு கின்றது. மேலும் பெருவெடிப்புக் கோட்பாடு மிகப் பெரிய பாடப்பரப்பு என்பதால் முழுமையாக இந்தச் சிறிய கட்டுரைக்குள் அடக்கிவிட முடியாவிட்டாலும் தூண்டாமணி விளக்கில் துலங்கும் ஞானச்சுடர் ஊடாக பின்வருமாறு ஆராய்ந்தால் ஏன் இது இலட்சினை ((முத்திரை)யாக அமைவதைப் பார்ப்போம்.

## தூண்டாமணி விளக்கு

ஒரு குடுவையில் ஏதேனுமொரு திரவத்தை நிரப்பவேண்டுமாகில், குடுவையில் இருக்கும் காற்று வெளியேறி குடுவை வெற்றிடமானாலேயே திரவத்தை அந்தக் குடுவையில் நிரப்பமுடியும். இவ்வாறு குடுவையில் திரவத்தை நிரப்பிய பின்னர் மீண்டும் அந்தத் திரவத்தை குடுவைக்கு வெளியே எடுக்கவேண்டுமாகில் காற்று உள்ளே சென்று வெற்றிடத்தை நிரப் பினாலேயே திரவம் வெளியேறும். ஆனால் குடுவைக்குள் காற்று உள்ளே செல்லவிடாது தடுத்து, திரவத்தைக் குடுவையில் இருந்து உறிஞ்சி வெளியே எடுத்தால் குடுவை சப்பையாகி ஒடுங்கிவிடும். மேலும் பொருள்களைப் பைகளில் பொதிசெய்யும்போது பைகளில் பொருள்களை வைத்துவிட்டு பைகளில் உள்ள காற்றை உறிஞ்சியெடுத்துவிட்டு பொதி செய்யப்பட்டால், பொதிகளில் உள்ள பொருள்கள் அசையாது இருப்பதை அவதானிக்கலாம். எனவே வெற்றிடம் (ஆகாயம்) எப்போதும் ஒடுங்கியே இருக்கும். திண்ம திரவங்கள் மற்றும் வாயுக்களாலேயே வெற்றிடமும் (ஆகாயம்) சேர்ந்து இயங்குகின்றது என்பது நிருபணமாகின்றது.

எனவே தூண்டாமணி விளக்கு மணி போன்ற அமைப்பையுடைய செம்பில் (குடுவை) எண்ணையை நிரப்பி அதன் தலைப்பகுதியில் சிறிய விளக்கை பிரிகளில் பூட்டி (விளக்கிற்கும் செம்பிற்கும் இடையே சிறிய துவாரம் இருக்கும்) பின் தலைகீழாகத் திருப்பித் தொங்கவிட்டால் செம்பில் உள்ள எண்ணை சிறு துவாரம் வழியாக விளக்கை நிரப்பியவுடன், விளக்கின் எண்ணை மட்டம் துவாரத்திற்கு மேலாக இருப்பதால், துவாரம் அடைபடுவதால் காற்று உள்ளே செல்லமுடியாமையால் எண்ணை வெளியேறுவது தடைப்படுகின்றது. விளக்கை பற்றவைத்து தீபம் எரியத் தொடங்கியதும் எண்ணை மட்டம் குறையக் குறையக் காற்று உள்ளே செல்ல, காற்று உள்ளே செல்லும் அளவுக்கு எண்ணையும் விளக்கிற்கு வருவதால் எண்ணை வெளியே சிந்தாது, விளக்கை யாரும் தூண்டிவிடாமல், விளக்கு தொடர்ந்து எரிவதாலேயே தூண்டாமணி விளக்கு என்று இதற்கு பெயர் வந்தது. புவியீர்ப்பு விசைக்கு உட்பட்டு இருக்கும் நாம் அண்டங்களின் விரிந்து ஒடுங்கும் பிரபஞ்ச இயக்கத்தைப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. அதாவது நாம் பூமியிலே தரையில் உட்காரவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கவும், எழுந்து நிற்கவும் நடமாடவும், உயரமான இடங்களில் ஏறி இறங்கவும் உடைகளை மாற்றவும் குளிக்கவும் உணவை உண்டு கழிவை வெளியேற்றவும் மற்றும் எமது வாழ்வியக் கங்கள் அனைத்தையுமே செய்வதற்கு புவியீர்ப்பு விசையே எமக்கு பங்களிப்புச் செய்கின்றது. ஆனால் விண்வெளியிலே இவைகள் அனைத்தையுமே செய்யமுடியாது. அல்லது செய்வது சிரமமானது. காரணம் அங்கு ஈர்ப்புவிசை இல்லை. இந்த ஈர்ப்பு விசையை அளக்கும் கருவி நிறையாகும். ஒரு அளவை காட்டும் இலத்திரனியல் தராசில், பத்துக்கிலோ அளவுள்ள அளவுப் படியை வைத்தால் சரியாக இயங்கும் தராசு பத்துக்கிலோ என எடையைக் காட்டும். ஆனால் சந்திரனில் அதே தராசில் அதே அளவுப் படியை வைத்தால் ஐந்திற்கும் குறைவான கிலோ எடையையே தராசு காட்டும். காரணம் சந்திரனின் ஈர்ப்பு விசை, பூமியின் ஈர்ப்பு விசையைவிடக் குறைவாக இருப்பதேயாகும்.

இவ்வாறு அதே தராசையும் அதே எடையையும் வெவ்வேறு கோள்களில் கொண்டு போய் நிறையை அளந்தால் அந்தந்தக் கோள்களின் ஈர்ப்புவிசைக்கேற்ப வெவ்வேறு நிறைகளையே தராசு காட்டும். மேலும் விண்வெளியிலே, விண்வெளியோட்டத்திலே வைத்து அதே தராசில் அதே எடையை வைத்து அளந்தால் அளவு பூச்சியமாகவே காட்டும். காரணம் விண்வெளியில் ஈர்ப்பு விசை இன்மையால் எடை தராசில் அழுத்தாது, மிதந்தபடி இருக்கும். தராசும் மிதந்தபடியே இருக்கும். எனவே எல்லைகள் கண்டுவிட முடியாதபடி எல்லையில்லாது விரிந்து கிடக்கும். பிரபஞ்சம் ஒடுங்கியும் இருக்கும். இதனால் கோள்கள் அச்சு மாறாது இயங்க இவையே பேருதவி புரிகின்றன. காரணம் சந்திரன் வேகம் கூடிக் குறையாது சம வேகத்தில் பூமியை வலம் வருவதுடன் பூமியுடன் இணைந்து சூரியனையும் வலம் வருகின்றது. எனவே நகர்ந்துகொண்டிருக்கின்ற பூமியை சந்திரன் வலம் வருகின்ற தென்றால் ஒரு அச்சில் பூட்டி இருப்பதனால்த்தான் இந்த இயக்கம் சாத்தியமாகும். இல்லா விட்டால் இந்த இயக்கம் சாத்தியமில்லை. பூமியிலே நகர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு மோட்டார் வாகனத்தை சம வேகத்தில் இன்னொரு மோட்டார் வாகனத்தால் சுற்றிவர முடி யாது. தவிர இரண்டு மோட்டார் வாகனமும் இணைந்து இன்னுமொரு நகர்ந்துகொண்டு இருக்கும் மோட்டார் வாகனத்தை சுற்றிவரவும் முடியாது. மேலும் இவை இறைவனால் திட்டமிடப்பட்ட ஒரு இயங்கியல் அமைப்பாகும். தவிர இறைவன் இந்த இயக்கங்களில் நேரடியாகத் தலையிடாது படைப்பிலும் பரிணாமத்திலும் உரிய வளங்களை உருவாகச் செய்து தன்னியக்க முறையிலேயே இயங்கவும் வைத்துள்ளான். இதனாலேயே கண்ணதாசன் இவ்வாறு பாடியுமுள்ளார். "பூச்சியத்துக்குள்ளே ஒரு இராட்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமலேயே ஒருவன் இருப்பான். புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்" எனத் தொடரும் பாடல் வரிகள் "தென்னை இளநீருக்குள்ளே தேங்கியுள்ள ஓட்டிற்குள்ளே தேங்காயைப்போல இருப்பான். புரிந்துகொண்டால் அவன் தான் இறைவன்" எனப் பாடியிருப்பது இறைவன் உருவமோ வடிவமோ இல்லாதது மட்டுமல்ல நிர்குணனாக, குணங்குறி எதுவும் இல்லாத வனாகவும் இருந்தாலும்கூட இறைவன் ஒரு படைப்பாளி என்ற அடிப்படையில் படைப்பில் மறைந்து இருக்கும் படைப்பாற்றலைக்கொண்டு இறைவனை அறியும் முயற்சியே சுந்தரமூர்த்தி

*சுறுசுறுப்பு அதிஷ்டத்தின் தாய் போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனாரின், தேவார வரிகளிலும் பின்வருமாறு காணப்படுகின்றது. "விறகிற்றீயினன் பாலில்படு நெய்போல் மறைய நின்ற மாமணிச் சோதியன்" என்ற பாடலும் தவிர இந்தப் பாடலில் மாமணிச் சோதியன் என்பது மாணிக்கக் கல்லைக் குறிப்பதுபோல இருந்தாலும் திருமாளிகைத் தேவரின் திருவிசைப்பாவிலே "ஒளிவளர் விளக்கே" என்று தொடங்கும் பாடலில் "தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே" என மாணிக்கக்கல்லையே குறிப்பிட்டு இருந்தாலும்கூட ஒளிவளர் விளக்கு என்பது தூண்டாமணி விளக்கையே எனக் கொள்ள இடமிருப்பதால், மாமணி என்பது இடைவிடாது ஒளியைத் தரும் ஒரு பொருள் என்பதில் பொதுப்பண்பு காணப் படுகின்றது. எனவே தூண்டாமணி விளக்கிற்கும் மாமணி என்றும் பொருள் கொள்ளமுடியும். எவ்வாறாயினும் படைப்புக்கள் பரிணாமத்தால் படைக்கப்பட்டு இருந்தாலும் மனிதர்கள் உட்பட உயிரினங்களும் ஒரு படைப்பாகவே இருந்தாலும் இந்துமதம் கூறும் அவதாரக் கோட்பாடும் அறிவுபூர்வமானது என்பதைப் பின்னர் தனியான கட்டுரையில் பார்ப்போம். இந்த வகையில் திருமூலரின் பின்வரும் பாடலும் மாமணி என்ற சொல்லைத் தாங்கி வருகின்றது.

கைப்பட மாமணி தானிடை கைவிட்டு
மெய்பட கல்லைச் சுமப்போன் விதிபோன்று
கைப்பட நெய்பால் தயிர் நிற்கத் தானறக்
கைப்பிட்டு உண்பான் போன்று கன்மி ஞானிக் கொப்பே.

-திருமந்திரம்.

சித்தர்கள் ஒரே பாடலிலேயே பல நோக்குப் புலப்படும்படியாக பாடும் ஆற்றல் வாய்ந்தவர்கள். தவிர மேலோட்டமாக இருக்கும் கருத்துக்கு எதிர்மறையாகவே, உள் நோக்காக வேறு பொருள் வரும்படியும் பாட வல்லமையும் இருந்து இருக்கின்றதென்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. உதாரணம் உலகியலில் விலை உயர்ந்த இரத்தினக்கல்லை கைவிட்டு, பெறுமதியில்லாத கல்லை யாராவது தலையில் சுமப்பார்களா? எனக் கேட்பதுபோல் இப்பாடல் அமைந்திருந்தாலும் உலகியலுக்குள் அழுந்தியிருப்பவர்களால், உயரிய தத்துவங் களை அறியமுடியாது என்பதையும் மாப்பொருள் உணவு உடலை வளர்க்கவே உதவும். அதுபோல் கல்வியறிவு, வெறும் அறிவை வளர்க்கவே உதவும். ஆனால் பூரணத்துவமான (பால்) அறிவும் பக்குவப்பட்ட (நெய், தயிர்) அறிவுமே, ஞானத்தை அறிய உதவும் எனப் பாடியுமுள்ளார். தவிர திருமூலர் அனுபவ முத்திரையை (இலட்சினை)யும் கூடவே இப்பாடலூடே பதித்தும் உள்ளார். அதாவது மாடு மேய்க்கும் இடையர்கள் வாழ்வில் பால் தயிர் நெய் தவிர்க்க முடியாத உணவாகும். இதைத் தாழ்வாக எண்ணிச் சிலர் வேறு உணவுகளில் விருப்பம் கொள்வதும் தனது சாதியை சிறுமையாக எண்ணி அடுத்தவன் சாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்வது பெருமையாகவும் எண்ணுவதும் இரண்டும் ஒன்றேயெனச் சாடுவதுடன் செய்யும் தொழிலே தெய்வம் என்ற அனுபவ முத்திரையை (இலட்சினை)யும் பதிக்கின்றார். மேலும் சிறுமையான மனநிலையுடையவர்களே பெருமையென நினைத்துக் கல்லைத் தலையில் சுமக்கின்றார்கள் எனவும் பாடியுமுள்ளார்.

*திருப்தி என்பது மனமகிழ்ச்சியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இலைமறை காயாக இருக்கும் படைப்பாளிகளே, தமது வாழ்வியல் அனுபவங்களூடாக படைப்புக்களைச் செய்து தமது அறிவு ஆற்றலை சான்றுபடுத்தப் பயன்படுத்துகிறார்கள். மேலும் உலகியலுக்குள் இல்லாத கடவுளுக்கோ, தெய்வங்களுக்கோ, அமர்களுக்கோ உலகியல் அனுபவ இலட்சினை (முத்திரை) தேவையற்றது. தவிர கல்வி யாளர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட அறிஞர்களுக்கும், அனுபவ இலட்சினை (முத்திரை) பதிக்கவேண்டிய எந்த ஒரு அவசியமும் இல்லை. ஆனால் அறியப்படாது, அங்கிகரிக்கப்படாது, இலைமறை காயாக இருக்கும் படைப்பாளியைச் சான்றுபடுத்துவதற்கே வாழ்வியல் அனுபவ இலட்சினை (முத்திரை) பயன்பாடாக உள்ளது. மேலும் இலட்சினை (முத்திரை) என்பது தனித்துவத்தை அடையாளப்படுத்திக்காட்டப் பயன்படும் குறியீடு தனித்துவம் இல்லாவிட்டால் ஏன் இலட்சினை (முத்திரை) பயன்படுத்தப்பட வேண்டும். எனவேதான் திருமூலரின் செய்யும் தொழிலே தெய்வம் என்ற வாழ்வியல் அனுபவ இலட்சினை (முத்திரை) சிந்திக்கத் தூண்டு கின்றது. மேலும் திருமூலரின் இந்த அனுபவ முத்திரையை மாடு மேய்க்கும் எல்லோருமே உரிமை கொண்டாட முடியுமா? உரிமை கொண்டாடினால் கல்வியறிவு இல்லாத எல்லோரும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆகிவிட முடியும் என்ற கோட்பாடு பிழையான முன்னுதாரண மாக அமையாதா? எனவே மூலனின் பூர்வ புண்ணிய பலனே சித்தர்கள் தொடர்பால் திருமூலர் என்ற நிலைக்கு உயர்த்தியமைக்கு காரணம் என்பது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிருபணமாகின்றது.

## இலட்சினை (முத்திரை)

இலட்சினை (முத்திரை) என்பது ஒரு மொழி, அது சிற்பமாகவும் ஓவியமாகவும்கூட இருக்கலாம். தவிர குறியீடாகவும், கற்பனை வடிவங்களாகவும் இருக்கலாம். பாரம்பரியமாக இருக்கும் ஓம் என்னும் பிரணவ மந்திரமே தூண்டாமணி விளக்கில் துலங்கும் ஞானச்சுடர். ஆனாலும் ஆற்றல் அறிவை அடையாளப்படுத்தவும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையையும் நிறுவுனர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளை பெருமைப் படுத்தவும், சந்நிதியான் அருள் ஆசிக்குமாக, இலட்சினை (முத்திரை)யாகவே இந்தக் கட்டுரையும் அமைகின்றது.

---

## வேலாய் இருந்து காணும் சந்நிதியானே

வேலாய் இருந்து எம்வேதனை தீர்க்கும் சந்நிதி வேலவா முருகா
பாவாய் சுரந்துனைப் பாடப்பணித்த பரமன் குருவே முருகா
காலால் நடந்துன் தலம் பல தொழு என வரம்தா வேல் முருகா
தேவ தேவர் தொழும் கோனே எமைப் பார்த்திட வாவேல் முருகா
ஊனாய் உருக்கியென் உளமே புகுந்து நின்று என்றும்
தேனாய்க் கவிபுனைய அருள்வோனே முருகா - நீயே
முன்வந்து நின்று என் நாவால் இசைத்திட
வேலா கித்தான்நின்று காண்பாயே சந்நிதியானே.

-சின்னப்பு தனபாலசிங்கம்

*சந்தர்ப்ப சூழ்நிலைகள் வாழ்க்கையை மாற்றிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 14

(தொடர்ச்சி...

# கடவுளின் புகழும் பெருமையும்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## 15) எல்லை இன்மை

என்றும் நிரந்தரமான கடவுளால் வழங்கப்பெறும் மிகப் பெரும் மரணமற்ற நிலையைக்கூட ஒரு நிழலாகத்தான் நாம் சிந்தித்துக்கொண்டு இருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது. ஆன்மாவின் கண்களைக் குருடாக்கும் அந்த ஒளி கடவுள் மட்டுமன்றி, அவர் எல்லையில்லாதவரும் ஆவர். எல்லையின்மை என்றால் என்ன என்று எம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. நாம் இங்கே இன்று காண்பதுபோல் ஒவ்வொரு ஆசிபெற்ற விடயமும் பிரதிபலிக்கும் விடயமாக அன்றி அதன் மூலத்துக்கு எடுத்துச் சென்று காட்டப் பெறுகின்றது. கடவுளின் மேலான இருப்பில் பொருள்களின் மூலங்களை உணர முடியும். அவை எல்லாவற்றினதும் மூல வடிவங்களே. நாம் எல்லாம் வெறும் நிகழ்வுகள் என்றும், இங்கேயுள்ள தோற்றப்பாட்டு உலகில் அலைந்து திரிகின்றோம் என்றும் தத்துவ ஞானிகள் எமக்குக் கூறுகின்றனர்.

## 16) நிழல்கள்

எங்களில் ஒவ்வொருவரும் எங்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மையினைக் கொண்டிருக்கின்றோம். எங்களது சொந்த நிலைகள்கூட இங்கே இல்லை. இத் தோற்றப்பாட்டுப் பிரபஞ்சம் உண்மை வடிவங்களது நிழல்களினதும், பிரதிபலிப்புக்களினதும் ஒரு தொகுதியாக இருக்கின்றது. அதேவேளை நாம் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தோற்றப்பாட்டின் மேலேயே இருக்கின்றோம். நாம் கடவுளது நிழல்களின் ஒரு தொகுதியோ தனியன்களின் ஒரு தொகுதியோ அல்லர். இந்தப் பூவுலகில் கருதக்கூடிய எல்லாத் தனிமனிதர்களையும் ஒன்று திரட்டுவதன்மூலம் கடவுளைப் பூரணமாகக் கொண்டுவர முடியாது. உன்னையும் என்னையும் மற்றும் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொன்றையும் ஒன்றாகச் சேர்த்தாலும் அது கடவுளாக மாட்டாது. ஏனெனில் காணக்கூடிய இவை யாவும் இறுதியில் நிழல்களும் உண்மையற்றனவுமாகும். பல உண்மை யற்றவற்றின் ஒரு தொகுதி ஓர் உண்மையைக் கொண்டிருக்கப்போவதில்லை. இவை யாவும் எவையாக இருக்க முடியுமென்று புரிந்துகொள்ளக்கூடிய மட்டத்துக்கும் கீழேயே நாம் இருக்கின்றோம். இவற்றின் மூலங்கள் எப்படி இருக்கக்கூடுமென்று புரிந்துகொள்ளக்கூடிய ஒரு வழியில் எமது மனங்கள் உருவாக்கப்பெற்றிருக்கவில்லை.

*புத்திசாலிக்கு ஒரு வார்த்தை சொன்னால் போதும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17) மூலங்கள்

எமது ஆன்மாக்கள் எமது வளங்களாகும். உடலும் மனமும் அவ்வளங்களின் பிரதிபலிப்புகள் ஆகும். ஆனால் நாம் எங்களைப்பற்றி நினைக்கும்போது எமது உடல்களையும் மனங்களையும் மட்டுமே சிந்திக்கின்றோம். எமது உண்மையான ஆன்மா எமது புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு எட்டாததாக உள்ளது. அந்த ஆன்மா எங்களிடத்திலேயே உள்ளது. உண்மையான அந்த ஆத்மா எங்களின் வளமாக எங்களிலேயே இருக்கிறது. அது கடவுளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றாகவும், எம்மிடத்தில் இருக்கிறது. எங்களின் அந்த ஆன்மாவாகக் கடவுள் எப்போதும் இருக்கிறார். அவர் காலம், இடம் என்பவற்றில் நாம ரூபங்களை வெளி யிடும் ஒன்றாக மட்டும் இருப்பதில்லை. அதனாலேதான் கீதையில் அந்த விஸ்வரூபக் காட்சி விவரிக்கப்பெறும்போது அந்தப் பூரணம் அப் புகழில் எங்கும் காணக்கூடியதென எமக்குக் கூறப்பெறுகிறது. எல்லைக்குட்பட்ட காட்சியின் விளைவுகளாக அமையும் அசிங்கத் தையும் துன்பத்தையும் நாம் காண்பதில்லை. எல்லையுள்ள அக்காட்சி ஒன்றை மற்றதிலிருந்து தனிப்படுத்திக் காட்டுகின்றது. அக் காட்சியைக் கொண்டு எல்லாவற்றின் பொருத்தத்திலும் எந்த அர்த்தத்தையும் நாம் அறிவதில்லை. கடவுள் முழுப்படைப்பையும் தானே கொண்டிருக் கிறார் என்னும் காட்சியே கடவுள் காட்சியாகும். கடவுளைக் காண்பது கடவுளின் கண்களுக் கூடாகவே காணவேண்டி இருக்கிறது. அது பிரபஞ்ச ஆன்மாவை அடைவதாக அமையும். அங்கே அறிவுக்கான கருவிகளும் அறியும் செய்முறையும் தொழிற்படுவதை நிறுத்தி விடுகின்றன.

## 18). முழுமையான பார்வை

கடவுளின் பிரசன்னத்தை உணர்வது உணர்ச்சியோ, புரிந்துகொள்ளும் புத்தியோ அன்று. அது உள்ளுணர்வின்மூலம் ஒரே நேரத்தில், ஒரே முறையில் முழுப்பிரபஞ்சத்தையும் உணர்வதைக் கருதும். அந்தத் தோற்றப்பாடு அடுத்தடுத்து ஒவ்வொன்றாகக் காணும் காட்சி அன்று. ஒரு தொடர்புள்ள பொருள்களை நாம் பார்க்க முயற்சிக்கும்போது இந்த உலகில் செய்வதுபோல் அடுத்தடுத்து ஒவ்வொன்றாக எண்ணும் விடயம் அதுவன்று. எமது கண்களால் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் நம்மால் பார்க்கமுடியாது. ஒரே நேரத்தில் பல பொருள்களை நாம் பார்க்கின்றோம் எனத் தோன்றினாலும்கூட அவை இடப்பரப்பில் பரப்பி இருப்பது போலவும் கால அளவில் ஒன்றையடுத்து இன்னொன்று எனத் தொடராகவுமே உண்மையில் நாம் பார்க்கிறோம். ஆனால் நாம் முன்னர் அவதானித்ததுபோல, கடவுளின் காட்சி காலமும் இடமும் கடந்த ஓர் அநுபவமாகும். எனவே அந்த அநுபவம் கணிதத்தில் கணக்கிடுவதுபோல ஒவ்வொன்றாகப் பல பொருள்களைக் காண்பதன்று. அது இருப்பிலுள்ள நிரந்தரத் தன்மையைக் காண்பதாகும். அதன்மூலம் இங்கே இப்பொழுதே எல்லாவற்றையும் காணவேண்டும். அது பின்னர் வேறு இடத்தில் காணும் காட்சியன்று. ஒவ்வொன்றும் இங்கே இப்பொழுதே இருக்கிறது. இங்கு என்பது இடமில்லாமலும் நேரம் கடந்ததுமாக உள்ளது. எமது கால - இடம், உடல் - உளம் என்ற சிக்கல் இங்கு நீங்கிவிடுகிறது. அவை

*வரவுக்கேற்ற செலவுதான் செய்யவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணத்துவத்துக்குள் இல்லாமல் போகின்றன. அப்படிப்பட்ட ஒரு காட்சியே கீதாசிரியன் அர்ச்சுனனுக்குக் காட்டுகின்றார்.

## 19) கடவுள் பிரக்ஞை

கால - இட, உடல் - உள சிக்கல் இல்லாத வேளையில் ஒருவர் எதனை உணருகிறார் என்பது பதினோராம் அத்தியாயம் முழுவதிலும் உள்ள சுலோகங்களில் கவிதா பூர்வமாக விவரித்துக் காட்டப்பெறுகிறது. ஒருவர் அங்கே எதுவும் பேசப் போகிறார் என்பது கருதப்பெறவில்லை. கீதையைத் தரும் கவிஞன் மொழியூடாகத் தன்னைப் பற்றியே வெளியிடவேண்டி இருக்கிறது. அந்தத் தெய்வீகத் தன்மையையும், அதன் அநுபவத்தையும் அவ்வேளையில் ஆன்மாவின் உணர்வாக அவர் கவிதைப் பாணியில் உபதேசிக்கின்றார். காலம் அவ்வேளையில் கடவுள் பிரக்ஞையோடு தலையைச் சுற்றும்படி அமைகிறது. ஆன்மா மனிதமொழியில் எந்த வார்த்தைகளையும் பேசவில்லை. அது மிக ஆழத்தில் அசைய வைப்பதோடு வேர்களில் இருந்தே தோன்றுகிறது. அது சிந்திக்கவும் இல்லை; உணரவும் இல்லை. ஆனால் ஆச்சரியத்தால் படிப்படியாக உருகிப்போகிறது. தெய்வீகக் காட்சியை அர்ச்சுனனுக்கு வழங்கும்போது அவனது தொழுகைகளின் விவரனைக்குப் பின்னால் ஆன்மப் பிரக்ஞை மறைந்துகொண்டு போவதையும், கடவுளின் பிரக்ஞை வளர்ந்து வருவதையும் காணலாம். அதனால் அர்ச்சுனனது தனிமனிதத் தொழிற்பாடுகள் யாவும் தாமாகவே மறைந்து போகின்றன.

## 20) எல்லை கடந்த மொழி

அங்கு ஒருவர் பேசுவதற்கோ, காண்பதற்கோ, கேட்பதற்கோ ஏதும் இல்லை. அங்கே ஒரு குறித்த புலனுணர்வுகூட இல்லை. அநுபவத்துக்கான கருவிகள் யாவும் ஒன்றாகக் கொண்டுவரப் பெறுகின்றன. சாதாரண புலக்காட்சியில் அவை தனித்தனியாகச் செயற்படுவதற்குப் பதிலாக அங்கு ஆன்மாவுக்கு உள்ளேயே ஒன்றிணைக்கப் பெறுகின்றன. முழு இருப்பும் ஆன்மாவின் பிரிக்கமுடியாத ஒளியில் மையம் கொள்ளுகின்றது. அத்துடன் சீவாத்மா பரமாத்மா நிலைக்குப் பறந்து செல்கின்றது. இந்தக் காட்சியைக் காணும் ஆன்மா எந்த மொழியிலும் வெளியிடாதபோதும் கூடத் தன்னையே எல்லாமாகிய கடவுளுக்குள் சொல்லமுடியாத வகையில் மாற்றிக்கொள்கிறது. நாம் எமது வாய்களின்மூலம் வார்த்தைகளால் பேசுவதுபோல கடவுள் ஒரு மொழியில் பேசுவதில்லை. எனினும் அந்தக் காட்சியைக் காணும் ஆன்மாவின் தொழுகைக்கு எல்லாம்வல்ல இறைவனிடம் இருந்து ஒரு விடை வருவதுபோன்ற ஒரு பதில் வருகிறது. எல்லாம்வல்ல இறைவன் எல்லை கடந்த மொழியில் ஒவ்வொன்றோடும் மற்றவற்றைப் பற்றிப் பேசுகிறார்.

## 21) என்றுமுள்ள நிகழ்காலம்

தனிமனிதனது உணர்ச்சி அல்லது கருத்து ஏதும் தவறான ஒன்று அன்று. அத்துடன் கீதை போதிக்கப்பெற்ற மகாபாரதச் சூழ்நிலையில் யுத்தம் நடைபெற்றுவிட்டதென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த யுத்தம் முடிவாகி வெற்றி பெறப்பெற்றது என்றும், எவர் ஒருவராலும் மேலும் செய்வதற்கு ஏதும் இல்லை என்றும் அர்ச்சுனனுக்குக் கூறப்பெறுகின்றது. அங்கு தனிமனிதர்கள் வெறும் கருவிகளாகவே இருக்கின்றனர். "ஒரு காலமற்ற என்றுமுள்ள எல்லையில்லாத இருப்பில் எதெது செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்துள்ளேன்" கால அடிப்படையில் இருந்து பார்க்கும் அர்ச்சுனனுக்கும் எமக்கும் மகாபாரத யுத்தம் இனிமேல்தான் எதிர்காலத்தில் நிகழப்போவதாகத் தோன்றுகிறது. ஆனால் எங்குமுள்ள பூரணத்துவத்துக்கு இடமோ காலமோ இல்லை. அது என்றுமுள்ள இப்பொழுதில் நடந்து விளைவுகளும் ஒரே நேரத்தில் தீர்மானிக்கப்பெறுகின்றன.

## 22) பூரணசரணாகதி

ஒவ்வொருவரும் இக்காட்சியை காணமுடியாது என்றும் சொல்லப்பெற்றுள்ளது. ஆன்மா விடமிருந்து அக் கேள்வி வந்தாலன்றி வெறுமனே கேட்டதும் உடனடியாக வரும் காட்சி அதுவன்று. நாம் செய்கின்ற சிறிய தர்மங்கள், நற்செயல்கள், ஆன்மிக நூல் கல்வி என்பன அந்த நோக்கத்துக்குப் போதுமானவை அல்ல. சில ரூபாக்களுக்கோ, டொலர்களுக்கோ மலிவாக வாங்கக்கூடிய ஒரு பொருள் கடவுள் அல்லர். தேவர்கள் இக் காட்சியைக் காண ஆசைப்பட்டாலும்கூட அது அவர்களால் முடியாத ஒரு விடயமாகும். ஆன்மிக நூல்களை எவ்வளவுதான் கற்றாலும் அதனைக் காண அது போதியதில்லை. நாங்கள் மேற்கொள்ளும் விரதங்களும், எம்மால் சிந்தித்துச் செய்யக்கூடிய முயற்சிகளும் அக் கடவுள் காட்சியின் ஆசியைப் பெறுவதற்கு உறுதி அளிக்கமாட்டா. அவ்வாறாயின் அதற்கான தீர்வு யாது? அதனை நாம் எப்படிப் பெறமுடியும்? ஆன்மா பூரணமாகக் கடவுளிடம் சரண் அடைவதே அதற்கான வழியாகும். சீவான்மா பரமான்மாவுக்குள் முற்றும் கரைந்து போகாவிடில் அக் காட்சியைப் பெறுவது சாத்தியமில்லை. எமது தனித்தன்மையை விடாது பற்றிக்கொண்டு எவ்வளவு விரதங்களையும், எவ்வளவு சாதனைகளையும் செய்தாலும், அவற்றை ஆன்மீக அல்லது சமயப் பயிற்சிகள் என்று நாம் செய்தாலும் கடவுள் காட்சியை அடைவதற்கு மாறான வழியிலேதான் நாம் போவதாக அமையும். எமது ஆன்மீகப் பயிற்சிகளில் எமது தனித்தன்மைகளைத் தொடர்ந்தும் பேணிக்கொள்கிறோமா இல்லையா என்பதே அக் காட்சிக்கான நிர்ணயிக்கவேண்டிய விடயமாகும். நாம் ஆன்மிக சாதனை செய்யும் சமய உணர்வு உள்ளவர்கள் என்பது உண்மையாக இருந்தபோதும், நாம் இரகசியமாக எமது அகங்காரத்தையும், ஆளுமையையும் இறுகப்பற்றிக் கொண்டிருக்கிறோமா? அப்படி நாம் பற்றிக்கொண்டு இருப்போமாயின் கடவுள் காட்சி எமக்கு மிகத் தூரத்திலேயே உள்ளது.

## 23) கடவுள் காட்சி

கடவுள் காட்சி ஓர் உடனடி அநுபவமாக யாருக்கு வரும் என்பதைப் பின்வருவன வற்றைக்கொண்டு அறியலாம். அவர் செய்யும் வேலைகள் யாவும் கடவுளுக்காகவே செய்யவேண்டும். அவர் கடவுளையே பரமாத்மா என்று கருத வேண்டும். அவர் எவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது எதிரியாக நினைக்கக்கூடாது. அவர் எல்லாவற்றையும் சமநோக்குடன் பார்க்க வேண்டும். அவரிடம் எதிலும் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை இருக்கக்கூடாது. எதுவும் அவருக்கு நல்லது, கெட்டது என்ற பேதம் இருக்கக்கூடாது. மற்றைய எல்லாவற்றையும் கடவுளை அடைவதற்கான கருவிகள் மட்டுமே என்று யார் கருதுகின்றாரோ, வாழ்க்கையின் ஒரேயொரு குறிக்கோளாக இந்த ஆச்சரியத்தை மட்டும் எவர் மனப்பூர்வமாகக் கருதுகின்றாரோ, கடவுளின் அன்பில் தனது முழு இருப்பையும் மாற்றும் ஆவலை எவர் கொண்டுள்ளாரோ அவரே கடவுள் காட்சியை ஓர் உடனடி அனுபவமாகப் பெறுவார்.

## 24) தனித்தன்மைக்கு இடமில்லை

இவ்வளவும் இருக்கவேண்டுமாயின் அங்கே தனித்தன்மைக்கு இடமில்லை. இறைவனது காட்சியை அல்லது அநுபவத்தைப் பெறுவதற்கு ஒருவர் தனது சீவான்மா என்ற தன்மையில் இருந்து விடுதலை அடைந்தவராக இருக்கவேண்டும். இதிலிருந்து கடவுள் மட்டுமே கடவுளைக் காணமுடியும் என்று தோன்றுகிறது. கடவுள் தன்னைத் தானே அடைகிறார். மனிதன் தன்னை ஒரு மனிதனாகவே பேணிக்கொண்டு கடவுளை அடைய முடியாது கடவுள் காட்சி தனக்குள்ளே தானாக விரிவாகின்றது. கடவுள் கடவுளிலேயே தன்னைக் காண்கிறார். அந்தப் புதிரோ, இரகசியமோ விசுவாசமுள்ள ஆன்மாக்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியது. இதயம் விசுவாசமாக இருக்கும்பொழுது ஒவ்வொருவரும் அந்த உயர்ந்த அநுபவம் பெற நல்லாசி உள்ளவராவர்.

***(அத்தியாயம்- 14 முற்றிற்று)***

**ஞானச்சுடர்**

ஞான மோகன வள்ளலின்
ஞானத்தில் வெளிவரும் சுடர்
அஞ்ஞானம் நீக்கும்
மெய் ஞானச் சுடர்

பக்கங்கள் தோறும்
பக்குவப்படுத்தும் வரிகள்
பக்குவமாக வாசித்தால்
பக்குவப்படுத்தும் எம் உள்ளத்தை.

விலைபேச முடியாத சொத்து
சுடருக்கு நிகரில்லை எதுவும்
அறிவுப்பசி போக்கி நிற்கும்
ஆச்சிரம அட்சய பாத்திரம் இது.

*-ச. வாகீசன்-*

***விவேகமும் நற்குணமும் வாழ்க்கை வண்டியின் இரு சக்கரங்கள்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே? சுருதியெங்கே? - எல்லவரும்,
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே? பிரசங்கமெங்கே?
ஆத்தனறிவு எங்கே அறை?"

சைவத்திற்குப் பெரும் சோதனைக் காலம் ஏற்பட்டிருந்தபோது, அதற்கு நேர்ந்த இடுக்கண் நீக்கி அதனைக் காப்பாற்றியவர்.

சைவம், தமிழ் இரண்டையும் தனது இரண்டு கண்களாக எண்ணி, வசனநடை கைவரப்பெற்று, எளிய இலகு அழகு தமிழில் உரையாற்றி, உரை எழுதி, உரை படைத்துக் கரைசேர்த்த நாவலர் அவர்கள், தனது தவபலத்தால் சிவபுண்ணியம் ஆற்றியவர். தேன் தமிழும், தூய சைவமும் இனித்தன.

"ஈழமுதல் தென்னாடு இருள்மூழ்கிப் போகாமல்
வாழ வைத்த சைவ மருந்து"

**பிறப்பு:**

கந்தப்பிள்ளைக்கும், சிவகாமியம்மையாருக்கும் 1822.12.18ஆம் நாளன்று, அவிட்ட நட்சத்திரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்தார். நல்லூரில் ஒளி வீசியது.

1827இல் வித்தியாரம்பம் - நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடமும், வேலாயுத முதலியாரிடமும் சித்திகரமாக அரங்கேறியது. அத்திபாரம் ஆழமாக அமைந்தது.

1834இல் ஆங்கிலக் கல்வியை சரவணமுத்து உபாத்தியாயரிடமும், சேனாதிராய முதலியாரிடமும் மேம்படுத்தினார். அது செவ்வனே இடம்பெற்றது.

1841இல், வெல்லும் தமிழையும், சொல்லும் ஆங்கிலத்தையும் யாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் கற்பிக்கும் வல்லமை பெறுதல் இஃது சிறப்பானதே. பார்சிவல் துரைக்குத் தமிழாசானாக நியமனம் பெற்று, விவிலியன் நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும் கருமத்தில் ஈடுபடுதல் வெற்றிகரமாக இடம்பெற்றது. மேலும் இவரது பிசிறலில்லாத படைப்புக்கள் வெளிவந்தன.

உதய தாரகைப் பத்திரிகையில் இவரது ஆக்கங்கள், கடிதங்கள் இடம்பெற்றன. கட்புலன் சம்பந்தமானவையாகும். யாவரையும் ஈர்த்தன எனலாம்.

1842இல் தந்தையார் சிவபதம். இரத்தின வல்லி விலாசம் நாடகம் பூர்த்தியானது. பெறுமதியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1846இல் சைவசமயப் பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி வழங்க ஏற்பாடு செய்தார். நாவலரே இலவசக் கல்விக்கு வித்திட்ட பெருமான் ஆவார். அரசு இவரையும் முன்னோடியாக்க வேண்டும்.

1846 நடுப்பகுதியில் இந்தியாவுக்குப் பயணம். பல பிரமுகர்களைச் சந்தித்து அறிமுகமானார். தமிழ், சைவம், பண்பாடு தொடர்பான பாரிய வளர்ச்சிக்கு இப் பயணம் வழிகோலியது. அம்பலவாண முதலியார் இவருக்குக் கூட இருந்து வேண்டிய உதவி புரிந்தார்.

1847இல், வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் முதன் முதலாக சைவம் தழைத்தோங்குவதற்கான பிரசங்கம் டிசம்பர் 31ஆம் திகதி நடைபெற்றது.

1848இல் மீண்டும், பார்சிவல் பாதிரியாருடைய தென்னிந்திய தேவாலயத்திலே விவிலிய நூலின் யாழ்ப்பாண நூலை மொழிபெயர்ப்புடன் ஒப்புவிக்கப் பயணமானார். ஸ்போல்டிங் பண்டிதர், சந்திரசேகரப் பண்டிதர் சமேதமாக விவிலிய நூல் மொழிபெயர்ப்பு அறிமுகமானது.

1848 ஆவணி 05ஆம் திகதி, வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை யினை நாவலர் ஸ்தாபித்தல்.

1849இல் அச்சுயந்திரம் வாங்குவதற்காக இந்தியா பயணம். திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் என்னும் பட்டம் நாவலருக்குச் சூட்டப்பெறுதல். வித்தியாநுபாலன யந்திரம் ஸ்தாபிக்க யாழ்ப்பாணத்தில் பெரு முயற்சி செய்து அது கைகூடலாயிற்று. சூடாமணி நிகண்டு உரை, சௌந்தர்ய லகரி உரை பதிப்பிக்கப்பெறலாயிற்று.

1850, 1951களில் பால பாடங்களும், நீதி நூல்களும் எழுதி அச்சிட்டு வெளியீடு ஆயிற்று. பிரம்மாதமாக நூல்கள் மிளிர்ந்தன.

மேலும் திருச்செந்திநிரோட்டக யமக அந்தாதி, நன்னூல் விருத்தி உரை, கொலை மறுத்தல், சிவாலய தரிசன விதி போன்ற தெளிவு பெறு நூல்கள் உரை நடை கமழ அச்சிடப்பெற்று வெளிவந்தன.

1852இல், பெரியபுராண வசனம் எழுதித் தயாரித்து நூலாக்கப்பட்டது. ஒவ்வொரு எழுத்து, ஒவ்வொரு சொல், ஒவ்வொரு வசனம், ஒவ்வொரு வரலாறு மிகவும் பெறுமதியாகவும், கவனமாகவும் அச்சிடப்பட்டது.

1853இல் திருமுருகாற்றுப்படை உரை, எழுதிய பின்னர், மேலும் சில நூல்களை எழுதி வெளியிட்டார்.

1854இல் சைவ தூஷண பரிகாரம், சுப்பிரபோதம், வச்சிரதண்டம் ஆகியன முக்கிய நூல்களாக பிரசுரிக்கப்பட்டன.

1857இல் தாயார் மரணம்.

1858இல் சென்னையில் வித்தியானுபாலன அச்சு இயந்திரசாலையைத் தாபிக்க ஆவன புரிந்தமை.

1859இல் திருவாசகமும் திருக்கோவையாரும் அச்சிட்டு சதாசிவம் பிள்ளையைப் பொறுப்பாக்கினார்.

*பொறுமையும் நேர்மையும் சக்தி வாய்ந்தவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1860 பிரம்மச்சாரிய வாழ்க்கையோடு, உருத்திராக்கமும் சூட்டப் பெற்றார்.

1861 திருக்கோவையாரின் உரையின் தொடர்ச்சியாக, திருக்குறள் பரிமேலழகர் உரை, தருக்கசங்கிரகம் என்பன அச்சிடுதல். அதனைத் தொடர்ந்து கந்தபுராண வசனம் பதிப்பித்தல்.

1864இல், சிதம்பர வித்தியாசாலையை ஸ்தாபித்தல். மேலும் திருவிளையாடற்புராண வசனம், சேது புராணம், இலக்கண விளக்கம், தொல்காப்பிய சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து என்பன அச்சிடுதல்.

1866 அகத்தியர் தேவாரத் திரட்டு அச்சிடலும், வெளியிடலும்.

1867 சிதம்பரத்திலே தீட்சதர்கள் ஆடு வெட்டி வேள்வி செய்ய முயன்றமையைத் தடுத்தல். சிதம்பர மும்மணிக்கோவை பதிப்பித்தல்.

1868 கோயிற்புராண உரை வெளியிடுதல்.

1869 சைவப்பிரசாரகர்களை உருவாக்குதல். வேதாகம பாடசாலை, மடம் என்பவற்றை நிறுவ ஏற்பாடு.

விஞ்ஞானப் பத்திரிகை - கண்டனம்

பதினோராம் திருமுறை பதிப்பு

அவதூறு கண்டனங்களை எதிர்கொண்டு மறுத்தல்

கந்தபுராணம் அச்சிடுதல்

அருட்பா வழக்கு. தள்ளுபடி

1870 யாழ்ப்பாணந் திரும்புதல். பிரம்மாண்டமான வரவேற்பு.

1872 நல்லூர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு.

வண்ணையில் சைவ ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபித்தல்

திருக்கேதீஸ்வர ஆலயத்தினைச் செம்மைப்படுத்தல்

கோப்பாய், புலோலியில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை ஸ்தாபித்தல்

1873 காரியசபை நியமித்து நல்லூர் ஆலய திருத்தம்.

சைவ வினாவிடை முதல் பாகம் பதிப்பு.

1875 நல்லூர் ஆலய முதலாம் இரண்டாம் பத்திரிகை வெளியிடல்.

1875 திருவிளையாடற்புராணம், நன்னூற் காண்டிகை உரை, நன்னூல் விருத்தி உரை, வெளியிட்டு சிவபூசாவிதி, அனுட்டான விதி, சிரார்த்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழகராதி எழுதியமை.

1876 விஷமருந்திலிருந்து தப்பியமை.

கரையூரில் பேதி நோய் தொடர்பாக அரசுக்கு இடித்துரைப்பு.

1877 கஞ்சித்தொட்டி தருமம்.

1878 தேசாதிபதிக்கு ஊழல்பற்றி முறைப்பாடு.

சண்டமாருதக் கண்டனம்.

1879 சட்டநிருபண சபை தேர்தலில், சேர்.பொன். இராமநாதன் அவர்களை ஆதரித்து பிரசாரம் செய்தல். சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜையில் நிகழ்த்திய இறுதிப் பிரசங்கம்.

*எல்லா உண்மைகளையுமே வெளிப்படையாகச் சொல்லமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயிகளின் ஒவ்வாத சில காரியங்களினால் மனம் வெதும்புதல்.

1879 டிசம்பர் 02 சுகவீனம் ஏற்படுதல்.

1879 டிசம்பர் 05 வண்ணார்பண்ணையில் சிவபதம்.

1879 டிசம்பர் 06 சிதம்பரம் சபாபதிச் செட்டியாரால் ஈமக்கிரியைகள் செய்யப்பட்டு சந்தனக்கட்டையில் தீமூட்டித் தகனம்.

இன்னுமொரு நாவலருக்காக இந்த மண் தவமாகிறது. யாருளர்? எவருமிலர்!

---

## தவத்திரு கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் பவளவிழாவினை ஒட்டிய வாழ்த்துச் செய்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வாக்கிற்கமைய உலகிலேயுள்ள பிறவிகளிளெல்லாம் உன்னதமானது மனிதப்பிறவி. மற்ற உயிரினங்களையெல்லாம் விட மனிதன் மேன்மையானவன். இத்தகைய உயர்ந்த பிறவி வாய்க்கப்பெற்ற மனிதன் தான் பெற்ற பிறவியின் நோக்கத்தை ஈடுசெய்ய வாழ்நாளில் நல்லவற்றைச் செய்ய வேண்டும். மற்றவர்களை நல்வழியில் வாழ வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கில் தவத்திரு கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் தனது வாழ்வினை அறப்பணிக்கே அர்ப்பணமாக்கிய பெரியோன். அவர்களுக்கு 75ஆவது பிறந்தநாளில் பவளவிழா நிகழ்வினை ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தியிருந்தமையை கேள்வியுற்று நான் பெருமையும் புளகாங்கிதமும் அடைந்தேன். சீரிய குணம்கொண்ட சிறந்த வல்லாளன் அன்புசால் இறையோன் எனப் பல்வேறு சொற்பதங்களால் சுவாமிகளை வாயாறப் புகழலாம்.

"செயற்பாலதோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி"

என்பது அறத்தின் அவசியத்தை வலியுறுத்தும் பொன்மொழி. இப் பொன்மொழிக்கு ஏற்றாற்போல சுவாமிகளால் ஆற்றப்பெறும் அறமானது மிகவும் உயர்வானது. கருணை நிரம்பிய உள்ளத்தோடு அவர் புரியும் தருமமானது நல்லறமாகி மக்கள் வாழ்வில் "தருமம் தலைகாக்கும்" என்ற வாக்கிற்கு அமைய அவர்களைப் பாதுகாக்கும் சுவாமிகள் தமக்கென வாழா பிறர்க்குரியாளர்களாக வாழுகின்ற பெரியார்களில் ஒருவர். அன்னதானக் கந்தனின் பெருமைகளையும் புகழையும் ஈழத்தில் மட்டுமல்லாது புலம்பெயர் தேசங்களில் இருந்தும் நாடிவரும் அடியவர்கள், அன்பர்களுக்கு பல வருடகாலமாக பசிப்பிணி போக்கி தர்மத்தை வாழ வைக்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் பணி மகத்தானது.

சுவாமிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் அறப்பணியானது யாழ் மண்ணில் மட்டுமல்லாது ஏனைய பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படுவதை நாம் பாராட்டுகிறோம். மோகனதாஸ் ஐயாவின் பவளவிழாவில் அவர்களது பணிகளையும் சேவைகளையும் பாராட்டி "அறம் பாலிக்கும் ஞான மோகனம்" என்ற நூல் வெளியிடப்பட்மையும் மிகவும் சிறப்பானது. சுவாமிகளின் பெருமைகளை எல்லாம் பல்வேறு நிலைகளில் இருந்து பாராட்டியமையை நான் அறிந்தேன். சுவாமிகளின் பவளவிழா நேரத்தில் நான் வெளியூரில் தங்கி இருந்தமையால் அவரின் சிறப்புக்களை அடியேனின் சிறு மடல்மூலமாக காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

*-திரு இ. குழந்தைவடிவேலு*

தலைவர் - ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி.

*துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபடவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் உயிரினங்களை கண்ணும் கருத்துமாக காத்து வருகின்றான் என்பது உண்மை

– *திரு பு. கதிரித்தம்பி* அவர்கள் –

இறைவன் ஒருவன். அவன் பல வடிவங்களை தேவைகள் நோக்கி எடுக்கின்றான். இந்த உண்மையை அருளுடையவர்கள் அறிவார்கள்.

இறைவன் கஜமுக அசுரனைக் கொல்ல விநாயக வடிவம் எடுத்தார். சூரனை சங்காரம் செய்ய முருக அவதாரம் பெற்றார். மகாபலியை அழிக்க மிகச் சிறிய மனித வடிவம் தாங்கினார். இப்படியே பல வடிவங்கள் எடுத்து தீயோரை அழித்தார். சிறிய வடிவம் தாங்கிய இறைவன் மகாபலியிடம் மூன்று ஊர் தரும்படி கேட்டார். மூன்று ஊர் கொடுக்க மறுத்த சக்கரவர்த்தியிடம் மூன்று அடி நிலம் கேட்டார். அதற்கு அவன் இணங்க பாரிய வடிவம் எடுத்து, ஓரடியால் உலகத்தை அளந்தார். இரண்டாம் அடியால் அதள பாதாளத்தையும் மூன்றாம் அடியை அவன் தலையின் உச்சியில் வைத்து அவனை அழுத்தி அவனது வேண்டுதலை அளித்து அருள் புரிந்தார். எனவே இறைவன் ஆன்மாக் களைக் காக்க பல வடிவங்கள் எடுத்தார் என்பதை உலக மக்கள் அறிவர்.

இந்தியாவில் முன்னொருகால் சைவசமயத்தை அழிக்க எண்ணியபோது திருஞான சம்பந்தரையும், திருநாவுக்கரசு நாயனாரையும், சுந்தரரையும் தமிழ்நாட்டில் திருவவதாரம் செய்ய அருளினார். சமணர்கள் திருஞானசம்பந்தரை அனல்வாதம், புனல்வாதம் செய்ய அழைத்தனர். ஏட்டை நெருப்பில் இட்டபோது சம்பந்தர் இட்ட ஏடு எரியாது இருந்ததைக் கண்டு சமணர் கொந்தளித்தனர். புனல் வாதத்திற்கு வரும்படி அழைத்தனர். அப்பொழுது ஞானசம்பந்தர் ஓடும் நீரில் ஏட்டை விட்டார். ஏடு நீரில் எதிரேறிச் சென்றமை கண்டு அடங் காத கோபத்துடன் வெளியேறிச் சென்றனர்.

நாவுக்கரசரை ஏழு நாள் சுண்ணாம்பறையில் அடைத்து எட்டாம் நாள் திறந்து பார்த்தபோது மிகவும் பூரிப்புடையவராக இருப்பதைக் கண்டு, நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ணப் பணித்தனர். அவற்றை வாங்கி அப்பர் உண்டார். பாற்சோறு உண்டும் இறவாது இருந்தமை கண்டு, சமணர்கள் அரசனிடம் சென்று எமது சமயத்தில் கற்ற கல்வியால் இறவாது இருக்கின்றான். இவனை விட்டால் சமண சமயமே அழிந்துவிடும் என்று சொல்லி கல்லோடு கட்டிக் கடலில் விட்டனர். கல் தெப்பமாக மாறி திருப்பாதிரிப்புலியூர் கடற்கரையை அடைந்தது. அப்பர் கட்டிய கயிறுகளை அவிழ்த்து புலியூர் பெருமானை சென்று வணங்கினார். இச் செயல்களை அறிந்த அரசன் தான் சமணர் சொல்லைக் கேட்டு, பழி செய்துவிட்டேனென மனம் நொந்து பிராயச்சித்தமாக ஒரு கோவிலைக் கட்டி அப்பரிடம் சென்று அவர் பாதம் வணங்கி தான் செய்த பிழையை மன்னிக்குமாறு கேட்டான். இப்படியாக இறைவன் அடியவர்களுக்கு அருள் புரிகின்றார்.

*ஆறுதல் கூறுபவனுக்கு தலைவலி வராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு பால் ஊட்டினார். இன்னும் செட்டிச்சி அம்மையார் மகளின் பிரசவத்துக்கு தாயாக நின்று பணி செய்தார்.

கலியுக காலத்தில் அருள் செய்கின்ற அருள் கடவுளாக முருகன் விளங்குகின்றார். மாவிட்டபுரக் கந்தன் மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகத்தை நீக்கி மனித முகத்தை அருளினார். மக்களின் பிதிர்க்கடன்களை நீக்க மாவிட்டபுர தீர்த்தமன்று கீரிமலை ஆலய தீர்த்தக்கடலில் தீர்த்தமாடி பிதிர்கடன் மக்களுக்கு நீக்க அருள் செய்தார். அதுபோல் நல்லூர்க் கந்தன் இருபத்தைந்து நாள் திருவிழா, அலங்கார வடிவில் நின்று அருள் புரிந்தார் என்று அடியவர்கள் போற்றுகின்றார்கள். ஒவ்வொரு நாளும் அன்னதானம் மடங்களில் சிறப்பாக நடைபெற்றன.

இனிச் செல்வச்சந்நிதிக் கந்தன் சிறப்பை எடுத்துக் கூறுதல் அவசியமானது. அன்னதானக் கந்தன் என்று பெயர் பெற்ற சந்நிதியான் அடியவர் துயர் துடைத்து வேண்டிய வரங்களையும் அருளுகின்றார். முருகேசு சுவாமிகள் நோயை நீக்கி ஆறு ஏழு ஆண்டுகளாக சந்தோசத்துடன் வாழ வைத்தார். இன்றும் எத்தனை அடியவர்களின் நோய்கள் நீக்கி, நிம்மதியையும் கொடுத்ததுடன் வாழ வைத்தார் என்பதை உலகம் நன்கு அறியும். அன்னக்கந்தன் என்ற பெயரை நிலைநிறுத்த மோகன் சுவாமிகளை தன் வழி இழுத்து எந்நேரமும் உணவு வழங்க அருள்புரிகின்றார். சந்நிதியான் ஆச்சிரமத்தை நன்கு வளப்படுத்தி வெள்ளிக்கிழமைகளில் ஆச்சிரமத்தில் கலை நிகழ்ச்சிகளையும், வைத்தியசேவையும், வறியோருக்கு உணவுப் பொருள்களும், துவிச்சக்கரவண்டிகளையும், கற்றல் செயற்பாட்டுக் குரிய பொருட்களையும் வழங்க முருகன் அருள்புரிகின்றார். இன்னும் மழை வெள்ள அழிவுகளுக்கு உடன்சென்று நிவாரணம் வழங்குகின்றார். மோகனதாஸ் சுவாமிகள் ஆட்டம் எல்லாம் முருகன் ஆட்டம். எனவே இறைவன் தான் படைத்த உயிர்களைக் கண்ணும் கருத்துமாக காத்து வருகின்றார்.

"இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க"

---

குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு வீடு என்ற ஒன்று அவசியம். சாஸ்திரம் சொன்னபடி சந்நியாச தர்மத்தில் தம்மை இணைத்து வாழ்ந்துகொண்டிருக்கும் சந்நியாசிகளுக்கு ஆசிரமம் என்பது முக்கியம். நாட்டையும் மக்களையும் நல்ல விதத்தில் கட்டிக் காக்கும் ஓர் அரசனுக்கு அரண்மனை என்பது முக்கியம். இந்த உலகத்தில் வாழும் சகல ஜீவராசிகளுக்கும் வழிபட்டுத் தங்களைத் தூய்மை ஆக்கிக்கொள்ள ஆலயம் என்பது முக்கியம். இங்கே சொல்லப்பட்ட வீடு, ஆசிரமம், அரண்மனை, ஆலயம் ஆகிய அனைத்துமே அவையவைகளுக்குரிய சாஸ்திர முறைப்படி கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கட்டப்பட்டிருந்தால்தான் அங்கு சுகமும் நிம்மதியும் என்றென்றும் நிலவும். ஒருவேளை அந்த சாஸ்திர விதிப்படி அவையெல்லாம் அமையாமற் போனால் அங்கு குழப்பம் நிகழும். துக்கம் சூழ்ந்துகொள்ளும். நிம்மதியும் சுகமும் இருக்கவே இருக்காது.

*நிதானமும் உறுதியும் போட்டியில் வெற்றி தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 90

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 விதைத்தது முளைத்திடுதல் நெல்லு எள்ளில் மட்டுமன்று
அன்றாடம் நாம் செய்யும் கருமங்கள் அனைத்திலுமாம்
நல்லதைச் செய்வோர்க்கு நல்லதே கிடைத்தல்போல்
கெடுதலைச் செய்வோர்க்கும் கெடுதலே கிடைத்திடுமாம்.

02 கேட்டதும் கிடைப்பது பொருள் பண்டம் மட்டுமன்று
இறையருள் கூடநாங்கள் கேட்டதும் கிடைப்பதாகும்
பொருள் பண்டம் பெறுதற்காய் பிறரைநாம் ஈர்த்தல்போல்
இறையினையும் ஈர்த்தாலே இறையருள் கிட்டுமாம்.

03 கொடுத்துநாம் வாங்குவது பட்சணங்கள் மட்டுமன்று
மரியாதைகூட நாங்கள் கொடுத்தேதான் வாங்கவேண்டும்
பட்சணங்கள் விடயத்தில் காட்டுகின்ற பரிவைப்போல்
மரியாதை கொடுத்தால்தான் மரியாதை கிடைத்திடுமாம்.

04 போதுமென்று எண்ணுவது சாப்பாட்டில் மட்டுமன்று
வாழ்க்கையின் அனைத்திலும் அந்தமனம் இருக்கவேண்டும்
சாப்பாட்டில் ஏற்படும் போதுமென்ற மனத்தைப்போல்
வாழ்க்கையிலும் வந்தாலே வாழ்க்கைப்பலன் கிடைக்குமாம்.

05 சுட்டெரிக்க வேண்டியது சுடலைப்பிணம் மட்டுமன்று
பட்டொழியக் காரணமாய் இருக்கின்ற பலதையுமாம்
பட்டொழியக் காரணமாய் இருப்பவற்றைச் சுட்டிடாமல்
பிணம் சுட்டு என்னபலன் சுடாதவையும் பிணம்தானே.

06 விட்டுக்கொடுக்க வேண்டியது பட்டத்துநூலை மட்டுமன்று
விடாப்பிடியாய் நிற்கின்ற வேண்டாத பலதையுமாம்
பட்டத்து நூலைவிட அதுஉயர உயரப் பறத்தல்போல்
விடாப்பிடியை விட்டிடவும் உயர்நிலையே கிட்டிடுமாம்.

*எதையும் தேடாமல் கண்டுபிடிக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கட்டழிக்க வேண்டியது கால் நெரிஞ்சி மட்டுமன்று
கெட்டவழி எமைநடத்தும் கேடுகெட்ட குணங்களையுமாம்
கேடுகெட்ட குணங்களை நாம் கட்டழிக்க முயலாமல்
கால்நெரிஞ்சி அழித்தென்ன நாம் பிறர்க்கு நெரிஞ்சிதானே.

08 தட்டிநாம் கேட்பதெல்லாம் பிறர்தவறை மட்டுமன்று
கொட்டிக் கிடக்கின்ற எம்மிடத்துக் குறைகளையுமாம்
எம்மிடத்துக் குறைகளை நாம் எமைத் தட்டிக்கேட்காமல்
தட்டிப்பிறர் தவறுகேட்டல் மிகப்பெரிய தவறாகும்.

09 வட்டிகட்ட வேண்டியது கடன்தொகைக்கு மட்டுமன்று
பாடுபட்டுப் பெற்றெடுத்து வளர்த்த கடன் தனக்கதுமாம்
பெற்றெடுத்து வளர்த்தகடன் வட்டியை நாம் கட்டாமல்
கடன்வட்டி கட்டியென்ன வளர்த்தகடன் வட்டிதானே.

10 பூட்டிநாம் வைத்திடுதல் புதையல்களை மட்டுமன்று
ஏட்டிக்குப் போட்டிபோட்டு எதிரியாக்கும் வழியையுமாம்
எதிரியாக்கும் வழிகளை நாம் பூட்டிவைக்க முயலாமல்
புதையல்களைப் பூட்டியென்ன எதிரியாலது திறந்திடாதோ.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com


*நட்புப் பாராட்ட வரும் எதிரிகளிடம் கவனம் தேவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் காட்டும் உயர் நெறி

**– திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

முழுமுதற் கடவுள் ஆகிய சிவபெருமானின் திருக்குமாரர்களாக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தாம் எழுதிய "சைவ வினா விடை" நூலில் குறிப்பிட்டுள்ளார். நன்கு சிந்தித்துப் பார்ப்பின் எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானின் அருள்வடிவங்களே அவர்கள் என்பதும், சிவனும் அம் மூர்த்தங்களும் வேறல்லர் என்பதும் தெளிவாகும்.

இவ்வுலகில் காலங்கள்தோறும் அசுரர்களால் அநீதிகளும் கொடுமைகளும் பல்கிப் பெருகி; தேவர்களை துன்புறுத்தி வந்தபோது பரம்பொருள் ஆகிய சிவபெருமான் பல மூர்த்தங்களை எடுத்து அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டமை பற்றிப் புராணங்கள், இதிகாசங்கள் எடுத்துரைக்கின்றன. "துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்" என்று இதனை நூல்கள் கூறும். தீமைகள் அழிக்கப்படுதல்; நன்மைகள் நல்லவர்கள் காப்பாற்றப்படுதல்; நிச்சயம் நடந்தே தீரும் என்ற நம்பிக்கையில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர். "நம்பினார் கெடுவதில்லை அது நான்குமறைத் தீர்ப்பு". "அறம் வெல்லும்; மறம் தோற்கும்" என்பது வெறுமனே நம்பிக்கை நிலையில் மாத்திரம் அல்ல. அநுபவத்திலும் நடைமுறை வாழ்விலும் அதன் உண்மை தெளிந்தவர்கள் இந்துக்கள். எனவேதான் எத்துணை கொடுமைகள், வன்செயல்கள், அநீதிகள் மற்றும் தீமைகள் என்பவற்றிற் குட்பட்டு; அல்லற்பட்டு, ஆற்றாது கண்ணீர் வடிக்க நேரிடினும் அவற்றை எல்லாம் பொறுத் துக்கொண்டு; இறைவனிடத்து அவற்றை ஒப்படைத்துவிட்டு; "கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும்; நீதி வெல்லும், நீதிக்கு அழிவில்லை" என்ற மகுட வாசகங்களில் நம்பிக்கை வைத்து, இறைவனிலும் நம்பிக்கை வைத்து சைவ சமயிகள் வாழ்ந்து கொண்டிருப்பதை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இறைவனை நம்பினார் கெடுவதில்லை என்பது முழுக்க உண்மை. அநுபவ ரீதியான உண்மை.

தீமைகள் அழிக்கப்படுகின்றன. அகற்றவும்படுகின்றன. ஆயினும் தீமைகளையும் கொடுமைகளையும் திட்டமிட்டு, இழைக்கின்ற கொடியவர்கள், அசுரர்கள் மற்றும் அரக்கர்கள் அழிக்கப்படுவதில்லை. மாறாக அவர்கள் தன்மாற்றம் பெற்று, இறைவனால் ஆட்கொள்ளப் படுகிறார்கள். இறைவன் விருப்பு, வெறுப்பிற்கு அப்பாற்பட்டவர். அவர்களுடன் கூடி நிற்கும் தீய தன்மைகள், அசுரக் குணங்கள் இறைவனின் அருட்பார்வையால் அழிக்கப்பட்டதும் அவர்கள் சுரர்கள் நிலையை எய்தி; நல்லவர்களாகத் தன்மாற்றம் பெற்றுவிடுகிறார்கள்.

"சிவபெருமான், சகல ஜீவதயாபரன்" என்பது கடவுள் இயல்புநிலை. ஆயினும் உலகில் மனிதர்கள் "ஏன் துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்?" என்ற வினா எழுகின்றது. அதற்குரிய விடையை சைவசித்தாந்தம் தந்துள்ளது. "செய்யும் வினைகளுக்கேற்ப விளைவுகள்

*நல்ல மனைவியும் நல்ல ஆரோக்கியமும் ஒரு மனிதனின் சிறந்த சொத்துக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்றன. அதனைக் கன்மம் என்பர். கன்மவினை; நல்வினை, தீவினை என்று இரண்டாக உள்ளது. "விதைத்ததைத்தான் அறுவடை செய்யலாம். "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது ஆன்றோர் வாக்கு. அவை எக்காலத்திலும் பொய்ப்பதில்லை.

இன்று விஞ்ஞானபூர்வமாக செயலுக்கேற்ற விளைவு உண்டு என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது.

மேலும் சிவபெருமான் சகல உயிர்கள்மீதும் (ஓர் அறிவுள்ளவை முதல் ஆறு அறிவுள்ள மனிதர்வரை) எவ்வித வேறுபாடுகளுமின்றிக் கொண்டுள்ள அளப்பருங்கருணையின் நிமித்தம் அவ்வாறு கொடியவர்களையும் வன்கணாளர்களையும் பரிவுடன் ஆட்கொண்டு அவர்களின் தீய குணங்களை நீக்கி, தம் அடியார்களாக்கி அருள்பாலிக்கிறார். நம் எல்லோர்க்கும் தந்தை இறைவன். அளப்பருங் கருணையினால் தாயும் ஆனவன். சிவபெருமான் விருப்பு வெறுப்பற்றவர்; நடுநிலையாளர். அதனால் சகல சீவதயாபரன், தீனதயாளன், கருணாமூர்த்தி ஆகிய திவ்விய திருநாமங்களாலும் அழைக்கப்படுகிறார். அவரிடம் அறக் கருணை, மறக்கருணை இரண்டும் உள்ளன.

சிவபெருமான் நல்லவர்களை வாழ்விக்கிறார். அது அவரின் அறக்கருணை. அதே வேளை தீயவர்களையும் அவர்களைப் பீடித்துள்ள தீய குணங்களையும் தீமைகளையும் அருட்பார்வையால் அழிப்பதன்மூலம் அவர்களை நல்லவர்களாக்கி தம் தொண்டர்களாக்கி வாழ்விக்கிறார். அது இறைவனின் மறக்கருணை ஆகும்.

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு"

-திருக்குறள்.

புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப்போல (தங்கம்) தவம் செய்கின்றவரைத் துன்பம், துயர்கள் வருத்த வருத்த மெய்யுணர்வு இறையுணர்வு மிகும் என்பது இக் குறட்பா தரும் கருத்து ஆகும்.

இந்து சமயம் காட்டும் மிக உயர்வானதும்; தற்கால உலகில் பழிக்குப் பழி வாங்க எத்தனித்துக்கொண்டிருக்கும் மனித சமுதாயத்தின் மத்தியில் மறக்கருணைமூலம் மனிதர்களைத் திருத்தி, குற்றங்களை மன்னித்து, மாமனிதனாகச் சமுதாயத்தில் சீராக வாழ ஒரு வாய்ப்பளிப்பது ஒரு தெய்வீகச் செயல் ஆகும். இது சைவ சமயம் காட்டும் உயர் நெறியாகும்.

எவரையும், எந்த உயிரையும் கொன்று, அழிப்பதன்மூலம் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. மாறாக, குற்றம் புரிந்தவர்களுக்கு அறிவுரையும் அறவுரையும் கூறி, குற்றங்களையும் அவற்றால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளையும் பாதகங்களையும் எடுத்துக்காட்டி அவர்களை உணரச்செய்து, நல்வழிப்படுத்தி மனிதத்தன்மைகள், ஒழுக்க சீலங்கள் நிறைந்த மனிதர்களாக வையத்துள் வாழ்வாங்கு, சீராக வாழ வழியமைப்பதுதான் முறைமையாகும்.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

*அவசியத் தேவைக்கு விதிமுறை கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரரும் இறை பணியும்

**– திரு செ. சிவபாதம்** அவர்கள் –

ஆன்மா திரோதான சக்தியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து ஆணவ முனைப்பில் வாழ்தல் பெத்தநிலை எனப்படும். இந்த நிலையில் இறைவன் ஆன்மாவாய் ஒற்றுமைப்பட்டு நிற்பான். இப்படியான தன்மையில் ஆன்மா வாழும்போது முற்பிறப்பில் தாம் செய்த தவப்பயனால் இப்போது இருவினையொப்பு மலபரிபாகம் ஆகிய அதிதீவிரதர சத்தினி பாதம் (4ஆவது) ஆகிய பக்குவநிலை வரும்போது இறைவன் திருவாதவூரரை தடுத்தாட் கொள்ளும் நோக்கமாக மனித உருவத்தில் குருவடிவம் தாங்கிவந்து திருவடி தீட்சை செய்து பசு கரணங்களை பதிகரணங்களாகவும் சிற்றறிவை ஞான அறிவாகவும் மாற்றி ஞானநூல்களை உபதேசம் பண்ணி சீவன்முத்தராக மாற்றியபின்பு உள்ளமாகிய ஆலயத்தில் அன்று தொடக்கம் இவரது பெயரால் தாமே வாழ்ந்து செயற்கரிய செயல்களைச் செய்தார் என்பதை செயல்முறையில் காட்டுவதே திருவாதவூரடிகள் புராணமாகும். இவை பின்வருமாறு.

பாண்டி நாட்டில் திருவாதவூரர் என்னும் பதியிலே சம்புதாசிரியர் இவர் மனைவி சிவஞானவதியாருக்கும் தவப்புதல்வனாக தோன்றினார். இவருக்கு அப்போது தந்தை தாய் உறவினர்கள் திருவாதவூரர் என்னும் திருப்பெயரை வைத்தனர். திருவாதவூரர் அன்று தொடக்கம் தான் கற்கவேண்டிய கல்வியைக் கற்று மேலும் பல வேதாகமம் முதலிய கலைகளையும் கற்று தெளிவடைந்தார். இதனை அறிந்த பாண்டிய மன்னன் இவரை அழைத்து கௌரவித்து தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் கொடுத்து தனது அரசியல் பணியை சிறந்த முறையில் நடாத்தும்படி முதல் மந்திரிப் பதவியைக் கொடுத்து தன்னுடன் வைத்திருந்தான். இப்படியாக முதல் மந்திரியாகிய திருவாதவூரர் பாண்டிய மன்னனின் அரசியல் பணியை சிறந்த முறையில் நடாத்தி வருகின்ற காலத்தில் அப்போது திருவாதவூரரின் மனம் தகுதியான குருவைத்தேடிப் பெறுவதிலேயே ஈடுபட்டிருந்தது. அப்போது அரசன் குதிரைகள் கொள்வனவு செய்யும் நோக்கமாக பொன்பொருள்கள் திருவாதவூரரின் கையில் கொடுத்து குதிரைளை வாங்கிவரும்படி அனுப்பினான்.

அரசனின் எண்ணப்படி குதிரைகள் கொள்வனவு செய்யச்சென்ற திருவாதவூரர் திருப்பெருந்துறை என்னும் புண்ணியத்தலத்தையடைந்தார். அப்போது அங்கே குருந்த மரத்தடியில் அடியார்கள் பலர் சூழ்ந்திருக்க ஞானாசிரியர் ஒருவர் வீற்றிருப்பதைக் கண்டார். உடனே முத்துச்சிவிகையிலிருந்து இறங்கி அவருக்கு முன்பாக வந்து அவரை வணங்கி குருவே உங்கள் கையிலுள்ள புத்தகம் என்ன பெயருடையது என்று கேட்கக் குரு சிவஞான போதம் என்று சொன்னதும் கேட்டு சிந்தை மகிழ்ந்தார். அப்போது குருவே நீங்கள் சிவம் ஏது; ஞானம் ஏது; போதம் ஏது என்று எமக்கு சொல்வீரானால் முன்பு ஒரு காலத்தில் கைலாசமலையிலுள்ள கல்லால மரநிழலில் அமர்ந்திருந்த தட்சணாமூர்த்தி என்று நினைத்து உங்களுக்கு யான் அடிமையாவேன் என்றார். அப்போது குருவாகிய சிவன் இவ்வார்த்தையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு சிரித்து அன்பனே சிவம் என்பது ஒப்பற்ற தனிப் பரம்பொருள். ஞானம் என்பது இவரை அறிதல். போதம் என்பது அறிந்ததை வாழ்க்கையில் அனுபவித்தல் என்று உபதேசித்தார். திருவாதவூரர் இவ் வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து குருவை வணங்கி தாங்கள் இப்போது அடியேனை தடுத்தாட்கொள்ள வேண்டுமென்று வணங்கி நின்றார். அப்போது குருவாகிய சிவன் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அவரது செவிவழியாக உபதேசித்து மனம் அமைதி பெறும்படி செய்து திருவாதவூரரின் சிரசின்மேல் திருவடிதீட்சை செய்து அவரது பசு கரணங்களை பதிகரணங்களாகவும் சிற்றறிவை ஞான அறிவாகும்படி மாற்றி அமைத்து மேலும் பல சைவசித்தாந்தத்தை உபதேசித்து அன்பனே உமது உடல் பொருள் ஆவி மூன்றும் உம்முடையதல்ல. நம்முடையனவாகும். ஆதலால் இங்கே உனைப்போல மனித உருவத்திலுள்ள இக் குரு வடிவத்தை உமது உள்ளமாகிய ஆலயத்தில் இருத்து வாயாக. இதுவே சைவசித்தாந்தத்தின் இறுதி விதிமுறையாகும் என்று கூற திருவாதவூரர் கேட்டு மகிழ்ந்து அக்கணமே குருவடிவத்தை தனது உள்ளமாகிய ஆலயத்திலே இருத்தினார். அப்போது குருவாகிய சிவன் இவரது உள்ளமாகிய ஆன்மாவை தனது கட்டுப்பாட்டுக்குள் அடக்கிவிட்டார்.

***திருப்பெருந்துறைச் சருக்கம் 74ஆம் பாடல்.***

விரிந்த சஞ்சித வினைகள் அன்புடன் நாம்
விழிக்க வெந்தன விரவும் இப்பிறப்பில்
பொருந்தும் வல்வினை உடலுடன் அகலும்
புந்திசேர் அருள் வருவினை போக்கும்
அருந்துயர்ப் பொருள் உயிர் உடம்பு உனதே அல்ல
நம்மனவாகும் இங்கு உனைப்போல்
இருந்த நம் குருவடிவத்தை கருத்தில் இருத்துவாய்
பொருள் இதுவென மொழிந்தார்.

திருவாதவூரர் இப்போது தன்னை மறந்தார். தன்நாமம் கெட்டார். இப்படியான நேரத்திலே குருவாகிய சிவன் திருவாதவூரரின் பெயரால் அவரது உள்ளமாகிய ஆலயத்தில் வாழத் தொடங்கிச் செயற்கரிய செயல்களைச் செய்யத் தொடங்குகிறார். (இதை சிவஞானபோதம் 10ஆம் சூத்திரம் ஏகனாகி இறைபணி நிற்க என்று கூறுகிறது) அவை பின்வருமாறு திருவாசகம் 51 பதிகத்தைப் பாடினார்.

சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் என்று கூறுவதைச் சிந்திப்போம்

***திருத்தெள்ளேணம்***

கயல் மாண்ட கண்ணி தன்பங்கன் எனைக் கலந்தாண்டலுமே
அயன் மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல் மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

***கைத்திறன் இல்லையேல் பிழைப்பு இல்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொ-ரை:*

அடியேனை கயல்மீன் போன்ற கண்களையுடைய அம்மைபாகன் சிவபிரான் தடுத்தாட்கொண்டருளியவுடன் பூமியிலுள்ளவர்களின்மேல் உள்ள பற்றும் ஒழிந்து வினையால் வரும் சுற்றத்தார் உறவும் ஒழிந்து நெஞ்சின்கண்ணுள்ள மயக்கமும் ஒழிந்தும் எஞ்சியுள்ள சொல்லின் செயலிளந்து உடம்பின் செய்கையும் இல்லாமல் போன விதத்தை பாடி ஆடுவோம்.

*குழைத்த பத்து*

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

*பொ-ரை:*

எண் தோளும் முக்கண்ணும் உடைய சிவனே தாங்கள் என்னை தடுத்தாட்கொண்ட காலத்தில் எனது உடம்பு ஆன்மா பொருள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவில்லையோ. இப்போது எனக்கு துன்பம் உண்டோ. நீ நல்லது செய்யினும் தீது செய்யினும் நானோ இதற்குப் பொறுப்பு (இல்லை)

சிதம்பரத்தில் சோழராசாவும் தில்லைவாழ் அந்தணர்களும் சைவப் பெரியார்களும் கூடி இருக்கும் மண்டபத்தில் திருவாதவூரடிகள் புத்தகுருவுடன் நீண்ட நேரம் சமயவாதம் செய்தார். அப்போது புத்தகுரு சைவசமயம் பொய்ச் சமயம் என்று கூற இதைக் கேட்ட திருவாதவூரர் கோபமடைந்து ஆண் பெண் ஆகியோரது வாக்கில் இருக்கின்ற சரஸ்வதியைப் பார்த்து கலைமகளே நீ இங்ஙனம் பொய்வார்த்தை கூறுவதேன். சிவபெருமான் முழுமுதற் பரம்பொருள் இல்லை என்று கூறும் மூடர்களாகிய புத்தகுருமாரின் நாவைவிட்டு சிவன் ஆணைப்படி போவாயாக என்று கூற சரஸ்வதியும் அப்போது வஞ்சகர்களான புத்தகுருமாரின் நாக்குகளிலிருந்து நீங்கினாள். அப்போது புத்தர்கள் நஞ்சைக் குடித்தவர்கள்போல மயங்கி ஊமையானார்கள்.

அப்போது இதனைக் கண்ட ஈழநாட்டரசன் திருவாதவூரடிகளை வணங்கி பின்வருமாறு கூறுவார். "ஐயா பேசும் வல்லமையுடைய புத்தர்கள் ஊமையானார். இப்போது பேச்சு வல்லமையற்ற எனது புதல்விக்குள்ள ஊமைத்தன்மையை நீக்கி பேசும் வல்லமையை உண்டாக்குவீரானால் யான் தங்களுக்கு அடியவனாவேன்" என்று கூறி மகளை அழைத்து வந்து திருவாதவூரருக்கு முன்பாக நிறுத்தினான். அப்போது திருவாதவூரர் இப் பெண்ணைப் பார்த்து திருவருள் செய்து ஊமைத் தன்மையை நீக்கி பேசும் வல்லமையை செய்ய அப்போது ஈழநாட்டரசன் தமது மகளின் குரல்வளத்தைப் பார்த்து மகிழ்ச்சியுற்று திருவாதவூரரை வணங்கி திருநீறு வாங்கி ஐந்தெழுத்தோதி உருத்திராக்க மாலையும் அணிந்து சைவர்களாக மாறி சிதம்பரத்தையே நிரந்தர வசிப்பிடமாகக்கொண்டு வாழ்ந்து வந்தான். இத்துடன் தில்லைவாழ் அந்தணர்களும் சோழ ராசாவும் சிவனடியார்களதும் விருப்பத்துக்கமைய திருவாதவூரர் புத்தர்களது ஊமைத் தன்மையை நீக்கி பேசும் வல்லமையைக் கொடுக்க அப்போது புத்த குருமார்கள் மகிழ்ச்சியடைந்து திருவாதவூரடிகளை வாழ்த்தி வணங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இச்சபையில் செய்த பிழைகளை மன்னித்து நாங்கள் நல்ல வாழ்வு வாழும்பொருட்டு தாங்கள் இப்போது திருவருள் செய்யவேண்டுமென்று கேட்டு திருவாதவூரரின் திருக்கரத்தால் விபூதி உருத்திராக்க மாலை ஆடை ஆகியவற்றை வாங்கி பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி இவற்றை உடம்பில் அணிந்து சைவசமயத்தவர்களாக மாறி சிதம்பரத்தையே தங்களது வசிப்பிடமாகவும்கொண்டு வாழ்ந்து வந்தனர்.

ஆதலால் திருவாதவூரடிகளின் குற்றம் நிறைந்துள்ள தோலும், எலும்பும், நரம்பும், தசையும் சேர்ந்த உடம்பானது திருவருள் நிறைந்த செயலினாலே சிவன் வாழும் ஆலய மாகும். (நடமாடும் ஆலயமாம்) இத் தத்துவத்தை மாயவலையில் சிக்கிய அஞ்ஞானிகள் அறியாமல் தங்களது தசையாலான உடம்புக்கு உணவு தேடுவதிலேயே காலத்தைக் கழித்து இறுதியிலே கொடிய நரகத்தில் வீழ்ந்து துன்பப்படுகிறார்கள். ஆதலால் நாமும் எங்கள் உடம்பையும் சிவன் வாழும் ஆலயமாக மாற்றியமைத்து இறைபணி செய்து மானிடப் பிறவியின் பயனைப் பெறுவோமாக.

அருணகிரிநாதர் கந்தரநுபூதியில் 31ஆம் பாடலில் பின்வருமாறு கூறுகிறார். "வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே"

கந்தபுராணம் அயனை சிறைநீக்கு படலத்தில் காட்டப்படுவது.

எனது யான் எனும் செருக்கு இகந்து தன் உணர்ந்து உளார்
மன ஆதி கொண்ட செய்கை தாங்கி மரபில் முத்திவழி தரும்.

***பொ-ரை:***

என்னுடையதென்றும், யான் என்றும் சொல்லும் இம் மயக்கத்தை விட்டு தம்மை உணர்ந்தவர்களாகிய தத்துவஞானிகளது மனம் முதலிய கருவிகள் செய்யும் தொழிலை அவர்களது தொழிலாக நினையாது தம் தொழிலாக நினைத்து ஏற்றுக்கொண்டு பரமுத்தி யைக் கொடுப்பவர்தான் சிவபெருமான்.

---

கடவுள்மேல் நம்பிக்கை குறைவான ஒருவர் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார். ஆனாலும் மற்றவர்களின் துன்பத்தைப் போக்குவதில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவர் தனக்கென்று எதையும் வைத்திருக்கமாட்டார். ஏழை எளியவர்களுக்கு கொடுத்துக் கொடுத்தே தன்னிடமுள்ள சொத்துக்கள், பணங்கள் எல்லாவற்றையும் இழந்து ஒரு குடிசையிலே வாழவேண்டிய நிலை. இருந்த வேலையையும் இழந்துவிட்டார். அப்படியிருக்கும் காலத்தில் வேலை தேடி ஒருநாள் தெருவிலே போய்க்கொண்டிருந்தார். அவரை வழிமறித்த மூதாட்டி ஒருவர் "சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகிறது ஐயா, சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கித்தாருங்கள்" என்று கேட்டார். கவலையடைந்த அவரும் தன்னிடமும் ஏதும் பணமில்லை என்ன செய்வது என்று சிந்தித்து சுற்றும் முற்றும் பார்த்தார். பக்கத்திலே இருந்த கோவில் ஒன்றிலேயுள்ள சிவலிங்கத்தின்மேல் கட்டப்பட்ட பித்தளைப் பாத்திரத்திலிருந்து சொட்டுச் சொட்டாக நீர் சிவலிங்கத்தின் மேல் விழுந்து கொண்டிருந்தது. அந்தப் பாத்திரத்தை எடுத்து, விற்று மூதாட்டியின் பசியைப் போக்க நினைத்தவர், பாத்திரத்தைக் கழற்றி எடுக்க முனைந்தபோது சிவ லிங்கத்திலிருந்து சிவபெருமான் பிரத்தியட்சமாகி "உலகிலுள்ளவர்கள் என்னிடமிருந்து பெற்ற பொன்னையும் பொருளையும் எனக்கே தருவதாக வேண்டிக்கொள்வார்கள். ஆனால் நீயோ பூவுலகிலுள்ள எனது சிருஸ்டிகளுக்கு உனது சொத்தையே தந்தாய். இன்றிலிருந்து நீ செல்வந்தன்" என்று கூறி மறைந்தார். ஆம்! அன்பர்களே நாம் எப்படி வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல. நமது சேவை மனப்பாங்குதான் நம்மைப் புண்ணியவான்களாக மாற்றக்கூடியது.

*நான் என்று கூறிக்கொண்டு எதிலும் முன்நிற்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| இ. உதயகுமார் | நோர்வே | 2000. 00 |
| P. பாலமுரளி | அல்வாய் | 25000. 00 |
| வே. செல்வநாயகம் | அச்சுவேலி | 1000. 00 |
| வி. சௌதாயிணி | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| R.V. இரத்தினசிங்கம் | லண்டன் | 10000. 00 |
| இ. கமலநாதன் | கல்வியங்காடு | 5000. 00 |
| T. சிவகுமார் | ஏழாலை | 5000. 00 |
| திரு சிவராஜலிங்கம் குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| இரத்தினம் இன்பலோகன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சீ. ரதிபாலன் | அச்செழு | 1000. 00 |
| அ. திலீபன் | அச்சுவேலி | 2000. 00 |
| வி. பவதர்சன் | முல்லைத்தீவு | 1000. 00 |
| சி. முத்துலிங்கம் | சிறுப்பிட்டி | 30000. 00 |
| ரேமன் யகிலா | அச்சுவேலி | 26000. 00 |
| P. புவனமோகன் | புத்தூர் | 500. 00 |
| ம. அருள்நங்கை | ஆவரங்கால் (சுவிஸ்) | 5000. 00 |
| ஜெ. அஞ்சனா | அமெரிக்கா | 10000. 00 |
| ச. துஷிகன் | சுன்னாகம் | 10000. 00 |
| திரு ரஞ்சன் குடும்பம் | சுன்னாகம் | 3000. 00 |
| த. சாந்தி | கனடா | 2000. 00 |
| பிறேக் வைற்வே | நீர்வேலி | 5000. 00 |

*ஐம்பொறிகளை அடக்கி வாழும் பெரியோரிடம் இறைவன் உறவாடுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ரா. அபிராமி | ஓட்டுமடம் | 10000. 00 |
| திரு சிவராசா குடும்பம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| க. தவச்செல்வன் | கரவெட்டி | 5000. 00 |
| செ. முத்துக்குமாரசாமி | உடுப்பிட்டி | 2000. 00 |
| H. ஆதிரா | தெகிவளை | 5000. 00 |
| ச. அகேஸ் | கோண்டாவில் | 1000. 00 |
| சி. கபிஷன், திரு சிவபாலன், சி. டினேஷன் | குடும்பம் லண்டன் | 10000. 00 |
| திரு நடராசா குடும்பம் | கொக்குவில் | 5000. 00 |
| ஆ. அருள் | கோப்பாய் | 10000. 00 |
| கோபிகா குகனேசன் | கனடா | 90300. 00 |
| சு. தர்மபாலகிருஷ்ணன் | பருத்தித்துறை | 1000. 00 |
| R. ரமேஷ் | கரணவாய் மத்தி | 20000. 00 |
| சு. தஸ்மிகா | மாலிசந்தி | 2000. 00 |
| K. தியாகராஜர் | கந்தர்மடம் | 20000. 00 |
| சி. ஸ்ரீரங்கன் | வயாவிளான் | 50000. 00 |
| திரு ஜேசுதன் குடும்பம் | சுவிஸ் | 10000. 00 |
| க. கோகுலன் | கைதடி | 10000. 00 |
| சு. ஜரா | டென்மார்க் | 15000. 00 |
| பா. ஜீவா | தம்பாலை | 25000. 00 |
| தியாகராஜா நினைவாக | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வே. செல்வநாயகம் | அச்சுவேலி | 500. 00 |
| S. முரளிதரன் | இணுவில் | 10000. 00 |
| K. குபேரமூர்த்தி | இணுவில் | 12000. 00 |
| கோ. கவிதர்சன் | வவுனியா | 5000. 00 |
| க. கர்சாத், க. ஜெரோமியா | அச்சுவேலி | 10000. 00 |
| திரு செல்லத்துரை குடும்பம் | திருகோணமலை | 5000. 00 |
| செ. டிருசாந் | மட்டக்களப்பு | 5000. 00 |
| வ. ஜெகதீஸ்வரன் | அச்சுவேலி | 5000. 00 |
| திருமதி விமலலோஜினி புஸ்பலிங்கம் | பிரான்ஸ் | 100000. 00 |
| செ. பரிமளவல்லி | நல்லூர் | 5000. 00 |
| யோ. சாரதாதேவி | அச்சுவேலி (பிரான்ஸ்) | 10000. 00 |
| மா. விக்னேஸ்வரன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| சி. சுதர்சன் மூலம் ஸ்ரீஸ்கந்தராசா நினைவாக | ஊரெழு | 5000. 00 |
| மு. லிங்கேஸ்வரன் | பிரான்ஸ் | 3000. 00 |
| N. சாருயன் | நீர்வேலி | 1000. 00 |
| க. கபிஷன் | கனடா | 5000. 00 |

*உலக விஷயங்களிலும் பிற காரியங்களிலும் மனதை விடக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| உ. ஆரீஸ் | கொடிகாமம் | | 20000. 00 |
| தே. செல்வமலர் | கொடிகாமம் | | 1000. 00 |
| க. கபீஷன் | சுவிஸ் | | 5000. 00 |
| கி. சிவமோகன் | கரவெட்டி | | 10000. 00 |
| வி. சசிகலா | பருத்தித்துறை | | 2000. 00 |
| திரு செந்திலிங்கம் குடும்பம் | ஆவரங்கால் | | 1000. 00 |
| திரு ராகுலன் | ஆவரங்கால் | | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | | 5000. 00 |
| ம. யாழினி | அவுஸ்திரேலியா | | 5000. 00 |
| M. ரமேஸ் | அவுஸ்திரேலியா | | 1000. 00 |
| N. தங்கலட்சுமி | கனடா | | 25000. 00 |
| N. அகானா | புன்னாலைக்கட்டுவன் | | 10000. 00 |
| சிவச்செல்வம் தசீபன் | ஜேர்மன் | | 25000. 00 |
| த. அக்ஷாரா, த. அக்ஷரா | உரும்பிராய் | | 2000. 00 |
| கு. பகீரதன் | கரவெட்டி | | 10000. 00 |
| திரு ஆருத்வர்சன் | ஏழாலை | | 31000. 00 |
| மா. சிவகுமாரன் | ஜேர்மன் | | 5000. 00 |
| மா. சிவானந்தன் | ஜேர்மன் | | 5000. 00 |
| யோ. தனுராஜ் | ஜேர்மன் | | 20000. 00 |
| கலாதேவி | ஜேர்மன் | | 15000. 00 |
| ச. கவிஷேசன் | பருத்தித்துறை | | 10000. 00 |
| S. ஜெகநாத் | நெல்லியடி | | 10000. 00 |
| சி. யசோதரன் | உடுப்பிட்டி | | 1000. 00 |
| K. அமுதா | அரியாலை | 1புட்டி அரிசி | 1000. 00 |
| திரு சின்னமணி | உரும்பிராய் | | 5000. 00 |
| செ. பாலசுந்தரம் | சுவிஸ்லாந்து | | 5000. 00 |
| S. பார்வதி | நல்லூர் | | 5000. 00 |
| வே. அன்னலெட்சுமி | திருகோணமலை | | 2000. 00 |
| K. ஆதரன் | நோர்வே | | 25000. 00 |
| ராஜ்குமார் சண்முகநாதன் | நோர்வே | | 185000. 00 |
| திரு சத்தியதேவன் குடும்பம் | அவுஸ்திரேலியா | | 10000. 00 |
| K. ஆதீஸ் | அவுஸ்திரேலியா | | 10000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | | 30000. 00 |
| திருமதி ய. ஜெயரூபி | சிறுப்பிட்டி | | 15000. 00 |
| திரு மோகனதாஸ் குடும்பம் | சங்கானை | | 30000. 00 |
| பத்மசிறி குடும்பம் | தெல்லிப்பழை | | 10000. 00 |
| பி. தனுஷியா | ஜேர்மன் | | 10000. 00 |
| த. தனுஷன் | பிரான்ஸ் | | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மத ஆதாரம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இப்பூவுலகிலே நாம் படித்துப் பயன்பெற நூல்கள் நிரம்ப உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விஷயத்தைச் சொல்கின்றன. இதே நேரத்தில் ஒவ்வொரு மதத்தினரும் தமக்கென்று ஒரு நூலை விஷேடமாகக் கொண்டு அதில்தான் ஜன்மம் கடைத்தேறும் வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றது எனக்கொண்டு பூசிக்கின்றார்கள். சிலர் அந்நூலுக்கு கோயில்போன்று ஒரு புனித இடம் அமைத்து வைத்துப் பூசிப்பதும் உண்டு. உதாரணமாக சீக்கியர்கள் தமது மத நூலை "கிரந்தஸாகேப்" என கௌரவமாக அழைப்பர். அவர்கள் அதற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

உங்கள் மத நூல் எது? என்று கிறிஸ்தவர்களைக் கேட்டால் தயக்கமில்லாமல் 'பைபிள்" என்பர். இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களை வினாவினால் "குர்ஆன்" என்பர். பௌத்தர்கள் "திரிபீடகம்" என்பர். எம்மைக் கேட்டால் "வேதம் - புராணம்" என்போம்.

எமக்கு மதம் எதற்கு? மத நூல்கள் எமக்கெதற்கு? குரு உபதேசம் எதற்கு என்று நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் எல்லாம் எமது மனச்சாந்திக்கே என்று கொள்ளலாம். இல்லையா?

ஆலய தரிசனம் செய்து வீடு திரும்பியதும் மனதில் ஒரு நிம்மதி. நல்ல நூல்களைப் படித்து முடித்ததும் மனதில் ஒரு நிறைவு.

இவை நிறைவைத் தருவதோடு நின்றுவிடாமல், சமய நூல்கள் எமக்கு நல்வழிகளையும் காட்டி நிற்கின்றன. தூய மனதிற்கும் நற்செயல்களுக்கும் அதன்மூலம் வளமான வாழ்வுக்கும் நிச்சயமாக வழிகாட்டி நிற்கின்றன.

எனவே, முதியோர் இளையோர் என்று வயதில் வித்தியாசம் பாராது நாம் எமது சமய நூல்களைப் படித்தாக வேண்டும். அவற்றின் சாராம்சத்தை உணர்ந்து அதன்படி ஒழுக வேண்டும். அவற்றில் நாம் காணும் நற்கருத்துக்களை எமது இளைய தலைமுறையினரின் மனதில் ஆழமாகப் பதிக்க ஆவன செய்தாக வேண்டும்.

நாம் எல்லோருமே ஆலாய்ப் பறக்கும் இக்காலகட்டத்திலே, இவற்றிற்கு நேரம் உண்டா என்று தயங்காது, எமது மற்றைய விடயங்கட்கு எவ்வாறு நாம் நேரம் ஒதுக்குகின்றோமோ, அதேபோல் எமக்கு வழிகாட்டும் வழிபாட்டு நூல்களைக் கற்றுணர்வதற்கும் யாம் நேரம் ஒதுக்கியாக வேண்டும். இவற்றின் பயனே எமக்கு இறுதியில் எஞ்சி நின்று பயன் அளிப்பவை என்பதை யாம் உணர்ந்தாக வேண்டும்.

இக் கருத்தை யான் ஏன் அடிக்கடி வலியுறுத்துகின்றேன் என்றால், எமது காலம் வேறு, இன்றைய காலம் வேறு. இளைய பிள்ளைகள் வளரும் முறையே வேறு. வினாக்களை சரமாரியாகத் தொடுப்பதில் இவர்கள் விண்ணர்கள். இது பிழை என நான் சொல்லவில்லை.

*மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எல்லா விடயங்களிலும் வினா எழுப்புவதில் அர்த்தமும் இல்லை. இங்கே பெரியவர்களாகிய நாங்கள் மிக உஷாராக இருக்க வேண்டும்.

சமய சம்பந்தமான விடயங்களை, ஒழுங்குகளை, நற்பழக்கங்களை அன்றாடம் இளம் சந்ததியினர் நம்பிக்கையுடன் ஏற்று நடக்கும் வண்ணம், நாம் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். நாமும் அவ்வாறு நடந்துகாட்ட வேண்டும். எமது பிள்ளைகள் நல்லொழுக்கங்களைக் கற்றாக வேண்டும். பயின்றாக வேண்டும். இவர்கள் வாய்மை என்னும் பாதையை விட்டு விலகி நடப்பார்களேயானால், எமது எதிர்கால சந்ததியினரின் நிலைப்பாடு எப்படியிருக்கும்! சிந்தித்துப் பார்த்தால் அவர்களது சமநிலையே கெட்டுவிடும் என்பது புரியும்.

பக்தியையும் நற்பழக்கங்களையும் கற்க இளமைப் பருவமே சிறந்த பருவம் ஆகும். வாழைப்பழத்தில் ஊசி ஏறுவதுபோல், பசுமரத்தாணிபோல் எப்பழக்கமும் கிரமமின்றி இளம் உள்ளத்தில் ஆழப்பதிந்து விடல் இயற்கை. பக்திக்கு, நற்பழக்கத்துக்கு, கால நேரம், வயது என்று பார்க்கக்கூடாது. துருவன் சிறுபிள்ளையில்லையா? மார்க்கண்டேயர் இளைஞன் இல்லையா? அவர்கள் மனதை இறைபால் செலுத்தி எம்பெருமானைச் சிக்கெனப் பிடித்து தாம் நினைத்ததைச் சாதித்து நற்பேறு அடையவில்லையா?

எனவே, எமது இளம் சிறுவர்கள் சமய நூல்தானே வயது வரப் படிப்போம் இது "அம்புலிமாமா" படிக்கும் வயது என்றிருந்துவிடக் கூடாது. அம்புலிமாமாவோடு இலகுவான நடையில் உள்ள சமயக் கதைகள் கொண்ட நூல்களையும் வாசிக்க வேண்டும். புரிந்து கொள்ள வேண்டும். முதலில் தெய்வம் என்று ஒரு சக்தி எமக்கு மேல் உள்ளது என்ற நம்பிக்கையை மனதில் உறுதியாக நிலைநாட்ட வேண்டும். வினாக்கள் எழுப்புவதில் மாத்திரம் பெருமை கொள்ளக்கூடாது. இதற்கு பெற்றோரும் ஆசான்களும் துணை நின்றாக வேண்டும்.

அன்றாடம் சமய சிந்தனைகள் இளம் மனங்களில் பதிந்தாக வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? முதலில் வீடு பின்னர் நாடு எதிர்காலத்தில் சுபீட்சம் காண வேண்டுமானால் தீய செயல்களை தீய சிந்தனைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்கும் சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அத்திவாரம் சமய போதனைகளே. இஃது பெற்றோர்க்கும் ஆசான்களுக்கும் சமர்ப்பணம்.

## அகங்காரம், ஆணவம், இறுமாப்பு எல்லாம் அழிவைத்தான் தந்திடும் - ஆன்றோரின் தத்துவம்

*அகங்காரம், ஆணவம், இறுமாப்பு எல்லாம்*
*அழிவைத்தான் தந்திடும் ஆன்றோரின் தத்துவம்*
*முகங்களையும் மாற்றிய வடிவங்கள் எத்தனை*
*உகந்ததொரு வழியும் கிட்டா ததாலே*
*உள்ளத்தால் நொந்து உருவத்தால் சலித்தான்*
*சிகரமாகத் திகழும் நிகழ்வுதானே வேலவன்*
*சிங்கமகா சூரனை வதம்செய்யும் நிகழ்வாம்.*

*-வ. யோகானந்தசிவம்-*

***வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் இயற்கையின் நியதி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## ஸ்ரீ பொள்ளாப் பிள்ளையார்

பொள்ளாப் பிள்ளையார் என்றால் உளியால் செதுக்கப்படாமல் அல்லது கல்லில் பொறியப்படாமல் சுயம்புவாகத் தானே தோன்றியவர். அதனால் "பொள்ளாப் பிள்ளையார்" ஆனார். நாளடைவில் மருவி பொல்லாப் பிள்ளையார் என அழைக்கப்படுகிறார்.

ஆதி சைவ மரபில் தோன்றிய அனந்தேசர் தினமும் பக்தியுடன் பிள்ளையாரைப் பூஜித்து வந்தார். இவரின் துணைவியார் கல்யாணி அம்மாள். இவர்களுடைய புதல்வன் நம்பியாண்டார் நம்பி. பூஜை முடிந்தபின் அனந்தேசர் தினந்தோறும் நைவேத்தியத்தை கோயிலில் விநியோகித்துவிட்டு மீதமுள்ளதைத் தன் வீட்டிற்கு எடுத்து வருவார். ஒருநாள் நைவேத்திய பிரசாதம் கேட்ட நம்பியிடம் இன்று பிள்ளையார் நைவேத்தியம் முழுவதையும் சாப்பிட்டு விட்டார். அதனால் வீட்டிற்கு எடுத்துவரவில்லை என விளையாட்டாகச் சொன்னார்.

ஒருமுறை தந்தையார் வெளியூர் போக வேண்டியிருந்தது. நான் வரும்வரை பூஜையை மகனை ஏற்று செய்யச் சொன்னார். நம்பிக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தந்தையைப் போலவே அதிகாலை எழுந்து நீராடிப் பூக்களையும், தாயார் தயாரித்து தந்த நிவேதனப் பொருட்களையும் கொண்டுபோய் விநாயகர் முன் வைத்தார். தனக்கு தெரிந்தவரை அர்ச்சனை செய்துவிட்டு நிவேதனம் செய்தான். காத்திருந்து பார்த்தான் நிவேதனப் பொருட்களைப் பிள்ளையார் ஏன் ஏற்கவில்லை. மெல்லக் குரல் கொடுத்து அழைத்தான். மன்றாடினான். தான் ஏதோ தவறு செய்தபடியினால்தான் பிள்ளையார் நிவேதனத்தை ஏற்க மறுக்கிறார் என்றெண்ணி அழுதபடி பக்கத்தில் இருந்த சுவர்மீது தன் தலையை மோதிக் கொண்டார்.

என் தந்தையார் படைத்தபோது நிவேதனத்தை ஏற்ற நீங்கள், நான் படைத்ததை நிராகரித்தது ஏன்? என முட்டிக் கொண்டார். அடுத்த கணம் விநாயகர்; தும்பிக்கைநாதன் தன்மேல் நம்பிக்கை வைத்த நம்பியைத் தன் முழுக் கரங்களால் தூக்கி அணைத்து, "நம்பி! பொறு" எனக் கூறிவிட்டு தன் வலக்கையை நீட்டி நைவேத்தியத்தைச் சாப்பிட்டுவிட்டு, நம்பிக்கும் ஊட்டிவிட்டார்.

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய நம்பி நடந்ததைத் தன் தாயாரிடம் கூறினான். ஆனால் அவர் அதை நம்பவில்லை. ஆசைப்பட்டால் அம்மாவிடம் வாங்கிச் சாப்பிடுவதுதானே? பூஜை அறையிலேயே உண்டுவிட்டுப் பொய் சொல்கிறானே என வருந்தினார். மறுநாள் கோயிலில் தந்தையார் மறைந்திருந்து பார்க்க மீண்டும் அந்த அதிசயம் நடந்தது. மெய்சிலிர்த்தார்.

*ஏன் என்று கேட்கத் தெரிந்தவனே புத்திசாலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனை வாரியெடுத்து அணைத்துக் கொண்டார். விநாயகர் திருவருளால் நம்பிக்கு எல்லாக் கலைகளும் வந்தன. திருநாரையூர் இரட்டை மணிமாலை உட்பட பத்துக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றினார். இச் செய்தி மன்னன் ராஜராஜதேவர் என்ற அபயகுல சோழனின் காதுகளையும் எட்டியது. தமிழ் வேதமான சைவத் திருமறைகள் மறைக்கப்பட்ட விபரங்கள் சொல்லி விநாயகரிடம் அவை இருக்குமிடம் அறிந்து சொல்லுமாறு நம்பியைக் கேட்டுக் கொண்டார். நம்பியும் பிள்ளையாரிடம் உதவியை நாட உடனே தில்லை நடராஜர் ஆலயத்தில் தென்மேற்கு மண்டபத்தில் சுவடிகள் இருக்கும் என அசரீரி ஒலித்தது.

உடனே சிதம்பரம் நோக்கித் தொண்டர்படை புறப்பட, பிள்ளையார் கூற்றுப்படி திருமுறைகள் கண்டெடுத்துப் பேரானந்தம் கொண்டனர். இன்றும் சிதம்பரத்தில் நடராஜர் கோயில் மேற்குப் பிரகாரத்தில் திருமுறை காட்டிய விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது.

ராஜராஜதேவர் தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று சைவத்திருமுறைகளைத் தொகுக்க அனுமதி கேட்டான். அவர்கள் சொற்படி மூவர் சிலைகளை வடித்து வைத்து வணங்கி அவற்றின் முன்னிலையில் சுவடிகள் இருந்த அறையைத் திறக்கச் செய்தான். சுவடிகளைப் புற்றுமண் மூடியிருந்ததைக் கண்டு மனம் வருந்தி நம்பியிடம் அவைகளைச் சீர்படுத்தித் தொகுத்துத் தருமாறு வேண்டினான். தொகுத்த தேவாரப் பதிகங்களுக்கு பண்முறை அமைக்க விரும்பிய நம்பியும், மன்னரும் திரு எருக்கத்தம்புலியூரில் உள்ள சிவபெருமானை வேண்டினர்.

"திருநீலகண்ட பெருமான் மரபில் பிறந்த வாய் பேச முடியாத ஒரு பெண் இத் தலத்தில் வசிக்கிறாள். அவளை அழைத்துச் சென்று பண்முறையைத் தேவாரப் பதிகங்களுக்கு அமைக்கச் செய்வீராக" என அசரீரி ஒலித்தது. தெய்வவாக்கு கிடைத்த மகிழ்ச்சியில் அந்தப் பெண்ணைக் கண்டறிந்து தில்லை கனகசபைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு எல்லோர் முன்னிலையிலும் அவளைக் கொண்டு தேவாரப் பதிகங்களுக்குப் பண்முறை அமைக்கச் செய்தனர். இன்று தேவாரப் பதிகங்கள் நமக்குக் கிடைக்க அருளியவர் பொள்ளாப்பிள்ளையார் தான்.

"பொள்ளாப்பிள்ளையார் திருவடிகளே சரணம்"

## திருவைந்தெழுத்து

இறைவனின் மூலமந்திரம் "சிவாயநம" என்ற பஞ்சாட்சரமாகும். ஓம் எனும் பிரணவ மந்திரத்துள் அடக்கம். திருவைந்தெழுத்தின் உட்பொருளை உணர்ந்து ஓதி வந்தால் வீடு பேறு வழுவாது கிடைக்குமென்று நாயன்மார்கள் கூறுகின்றனர். திருவைந்தெழுத்தின் மகிமையை எவராலும் கூறமுடியாது.

ஐந்தெழுத்தின் உட்பொருளாக விளங்கும் இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு பஞ்சகிருத்திய நடனம் ஆடுகின்றார். அவர் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் எழுதிய நியமப்படி படைத்தலையும், வினைகடிந்த ஆன்மாவுக்கு அழித்தலையும், வினை முடியும்வரை காத்தலையும், மலங்கெட மறைத்தலையும், வினை ஒழிந்து ஈடேறும் ஆன்மாவுக்கு அருளலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநடனம் மூலம் புரிகின்றார். இறைவன் திருநடனம் புரியாவிடின் அணுவும் அசையா என்பர். எனவே மனிதன் திருவைந்தெழுத்தின் மகிமையை உணர்ந்து இடையறாது ஓதிவர இறைபதம் காண்பான்.

"உற்றார் ஆருளரோ உயிர் கொண்டுபோம் பொழுது" நமது உயிர் கொண்டு போகப்படும்பொழுது வேண்டிய பெருந் துணையைப்பெற நாம் வாழும் காலத்திலேயே முயல வேண்டும். இப்பொழுதே நம் இறைவனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து அவரிடம் சரணடைந்து வாழ்ந்தோமானால் அந்த நேரம் அவர் எண்ணத்துடனேயே உயிர் பிரியும். "நமசிவாய" திருவைந்தெழுத்து மந்திரத்தைப் பற்றிப் பவசலத்தைக் கடக்க முயல்வோமாக.

"சிவாயநம" என்று சிந்திப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை.

"நற்றுணையாவது நமச்சிவாயவே"

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே"

"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே"

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்"

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கிடக்கின்றோம். இக்கடலினின்றும் கரையேற்றத்தக்க தோணி திருவைந்தெழுத்தேயாகும்.

நமச்சிவாயவே நம்பெருந்துணையே
சிவாயநம சொல்லிச் சிவகதி பெறுவோம்
ஆடியபாதம் நாடித் தொழுவோம்
திருவடித் தாமரை சிரசினில் சூடுவோம்.

எம்பெருமானே! கனகசபைதனிலே நின் களிநடனம் கண்டு களிப்பெய்த வேண்டும். ஆடியபாதம் நாடித் தொழுவேன். நஞ்சை அமுதாக நயந்தவனே. அஞ்சேலென்று அருள்வாய் தில்லை நடராஜனே.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் ஐந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையும் தொழாப் பிழையும் துதியாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே.

ஐந்தெழுத்தை ஓதுவோரின் அகத்தினில் நின்றாடும் ஐயனே சரணம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

(தொடரும்...

*திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமாக இருப்பதும் தனிமையாக இருப்பதும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதா?

**– இணையம் –**

பேச்சை அறு. மௌனமாக இருப்பதும் தனிமையாக இருப்பதும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதா?

ஆரம்பகட்டத்தில் ஆமாம். மௌனமாக இருப்பதற்கு முனிவர்களும் ரிஷிகளும் வனாந்தரங்களுக்குப் போனார்கள். நிசப்தம் கருதிப் போகவில்லை. வனம் சப்தமில்லாத இடம் என்று அவர்கள் போகவில்லை. விலங்குகளின் உறுமல்களும், பறவைகளின் கூச்சல்களும், வண்டினங்களின் முரல்களும், காற்றின் சீழ்கை ஒலியும், அருவியின் இடையறாத ஓசையும் அவர்களுக்குக் கேட்டுக்கொண்டுதானிருக்கும்.

ஆனால், இவை அவர்கள் கவனத்தை ஈர்க்காது. அதேநேரம் இதற்கிடையில் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டால் அவர்கள் திடுக்கிட்டுப் போவார்கள். மனிதர்களின் பேச்சுக் குரல் கேட்டால் நிச்சயம் மனம் திசை திரும்பும்.

"யாரோ முனிவர் உட்கார்ந்திருக்கிறார். வா நமஸ்கரித்துவிட்டு போகலாம்" என்றால் அந்தத் தவம் கண்டிப்பாகக் கலையும். மனிதர்கள் நடமாட்டம் இல்லாத வனாந்தரங்களும், மலை உச்சிகளும், குகைகளும் அவர்களுக்கு மௌனம் பழக வசதியாய் இருந்தது. இன்றைக்கும் மௌனம் பழக அதுதான் வசதி. ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் கிடைத்த விடுமுறையில் எந்த வனாந்தரத்துக்குப் போவது, எந்தக் குகையில் போய் உட்கார்ந்துகொள்வது என்று நீங்கள் கவலைப்படலாம். கொஞ்சம் யோசித்தால் வேறு உபாயங்கள் இருக்கின்றன.

நிசப்தம் அல்ல நாம் கேட்பது. பேச்சு அறுப்பது. பேச்சிலிருந்து விடுபடுவது. இதற்குப் பேருந்துப் பயணங்கள் உதவும் என்று எனக்குத் தோன்றுகிறது. காலையில் எழுந்திருந்து தொலைதூர பஸ் ஏதேனும் பிடித்து நாற்பது மைல், ஐம்பது மைல் தள்ளிப்போய் ஏதேனும் ஒரு ஓட்டலில் உணவருந்திவிட்டு, எங்கேனும் ஒரு கோயிலில் உட்கார்ந்துவிட்டு அல்லது ஏதேனும் ஒரு பேருந்து நிலையத்தில் அமர்ந்துவிட்டு அந்தி சாய்ந்ததும் மறுபடியும் பேருந்து ஏறி வீட்டுக்கு வரலாம்.

தெரிந்தவர் யாரும் இல்லாத ஒரு ஊரில் தனியே உட்கார்ந்திருக்கலாம். ஆனால் உலகம் உங்களைச் சும்மா விடாது. "சாருக்கு எந்த ஊரு?" பதில் சொல்லாது நீங்கள் பேந்தப் பேந்த விழிக்கலாம். "பேச்சு வராதா?" அவர் துக்கப்படலாம். மௌனமாய் தலைகுனிந்து நீங்கள் உட்கார்ந்திருக்க, காது செவிடுபோல இருக்கு என்று அவர் முகம் சுளிக்கலாம். எத்தனை நேரம் அருகில் இருந்து உற்றுப் பார்ப்பார்? நகர்ந்து விடுவார். நீங்கள் தனிமையில் மூழ்கியிருக்கலாம். மௌனத்தைக் கடைப்பிடிக்கலாம். மறந்துபோய் உங்கள் ஊரைச் சொல்லிவிட்டால், "ஆமா ஆமா என் உறவுக்காரர்கூட அங்குதான் இருக்கிறார்கள்" என்று

*எளிய வாழ்க்கையே இனிய வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து விடுவார். பிறகு ஒன்றை ஒன்று பிடித்துப் பிடித்துப் பேச்சு தொடர்ந்துகொண்டிருக்கும். பேச்சு முற்றி முதிர்ந்து "நம்ம சி.எம் தப்பா, சரியா சொல்லுங்க பார்க்கலாம்" என்று மிகப் பெரிய கேள்வி உங்கள் முன் வைக்கப்படும். எதற்கு இது? இதனால் பத்துப் பைசாவுக்கு லாபம் உண்டா? யார் கேட்பார்கள்? எதை நிருபிக்க இந்தக் கேள்வி அல்லது பதில். பொழுதைக் கொல்கிற ஆட்கள்தான் அதிகம்.

மனதை வெகு எளிதில் பார்த்துவிட முடியாது. மனத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே மனம் உங்களை வேறு பக்கம் திசை திருப்பும். இந்த நேரம் மௌனமாக இருக் கிறதா? எதுவும் பேசாது இருக்கிறதா? உங்களால் பேசாது இருக்க முடியாது. மனம் பேசாது இருக்கிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்போது நீங்கள், மனம் என்று இரண்டு விசயங்களாக இருப்பீர்களா? ஆமாம். இது இன்னொரு விசித்திரம். மனத்தை மனத்தால்தான் உற்றுப்பார்க்க முடியும். உற்றுப் பார்த்த மனம் மௌனமானதும், அதைப் பார்க்கின்ற மனம் ஓயத்தொடங்கும். அப்போது உள்மனம் ஒரு தந்திரம் செய்யும். மனம், உள்மனம் இரண்டும் ஒன்றே.

இன்னும் ஆழமாகவும் இதைப் பார்க்கலாம். அவன் வருகிறான், இவள் நிற்கிறாள். அது காகம், இது கழுதை என்று மனம் மூளையிலிருந்து தகவல் எடுத்து வெளியே சொல்லிக்கொண்டிருக்கும். அதுமட்டுமல்ல. இம்மாதிரியான உருவங்களற்ற விஷயங்களையும் மனம் போடும். எந்த உருவமற்ற நிறங்களை, நிறப் பிரிகைகளை, வடிவங்களை மனம் காட்டும். உலகில் இல்லாத சில வண்ணங்கள், சில வடிவங்கள் உள் மனதில் தோன்றும். மறுபடியும் சொல்கிறேன் மனம், உள்மனம் இரண்டும் ஒன்றே.

நீங்கள் மனத்தை கவனித்ததில்லை என்று அர்த்தம். நீங்கள் மனத்தைக் கவனிக்கத் தொடங்கினால் நான் சொல்வதைவிட பலநூறு குரங்கு சேஷ்டைகளை இந்த மனம் செய் வதைக் கவனிக்கலாம். திருடு, பொய், கற்பழிப்பு, கயவாளித்தனம் சகலதும் இந்த மனம் பொழுது விடிந்து பொழுது போனால் செய்துகொண்டிருப்பதைக் கவனிக்கலாம்.

நல்லதாக யோசி என்று நான் சொல்லவில்லை. நல்லதோ கெட்டதோ மனம் இடையறாது சலனப்பட்டுக்கொண்டே இருக்கிறது. சலனத்தை நிறுத்தும் முயற்சிதான் மௌனம். அதிரடி ஆட்டத்தை நிறுத்துகின்ற தொடக்கம்தான் மௌனம். மௌனத்துக்குத் துணைபோவதுதான் தனிமை.

தனிமையும், தனிமையால் ஏற்பட்ட பேச்சறுப்பும் உங்களை அதிகம் மனத்தைக் கவனிக்கத் திருப்பும். இது விட்டு விட்டுத்தான் ஏற்படும். மனம் விலகி வேறு எங்கேனும் அலையும்பொழுது, வேறு ஏதேனும் கற்பனைக்குப் போகும்பொழுது மிகப்பெரிய பணக்காரனாக நீங்கள் வாழ்வதாக யோசிக்கும்பொழுது சட்டென்று அறுத்துவிட்டு, என்ன யோசிக்கிறாய் என்று மறுபடியும் உற்றுப்பார்க்க மனம் சுருண்டு பின்னடைவது தெரியும்.

உண்மையில் மனம் என்ற பொருள் இல்லை. ஆனால் மனம் என்பது எங்கோ இருக்கிறது. எங்கு இருக்கிறது? தொடையிலா, குடலிலா, மூளையிலா? இல்லை. நான் என்று எதைச் சொல்கிறோம்? நெஞ்சைத் தொட்டுத்தானே. நெஞ்சு எங்கே? இடது பக்கம்

*உயர்ந்த நேர்மையில்தான் அதிகப் பணிவு இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயத்தையா தொடுகிறோம். இல்லை. நடுவில் நெஞ்சுக்கு நடுவில்தான் என்று சொல்கிறோம். அங்குதான் தட்டுகிறோம்.

அப்படியானால் நான் என்கிற அந்த மனம் எங்கிருக்கிறது? மார்புக் குழியின் நடுவிலிருந்து ஒரு விரல் நுனி தள்ளி வலப்பக்கம் இருக்கிறது. அந்த இடத்தில்தான் உயிர் என்பதும், அந்த இடத்திலிருந்துதான் எண்ணங்கள் தோன்றுவதும் நடக்கின்றன. எண்ணங்கள் எங்கு தோன்றுகிறதோ அந்த இடத்திற்கே மனம் என்று பெயர்.

மனம் என்பது ஒரு உறுப்பு அல்ல. ஆனால் அது ஒரு உறுப்புபோலும் ஒரு இடத்தில் இருக்கிறது. உறுப்பாக இல்லாது வேறு ஏதோ ஒரு சக்தியாக இருக்கிறது. உயிர் என்ற சக்தியாக இருக்கிறது. உயிர் சக்தி மனதுக்கு அருகே இருக்கிறது. அல்லது மனம் தான் உயிர் சக்தியாக தோற்றமளிக்கிறது. அதனால்தான் உயிர் என்பதையும், மனம் என்பதையும் பார்க்கமுடியவில்லை. அது வெறும் சக்தி, சக்தி ரூபம். சக்தி நகர்ந்தால் இந்த உடம்பு சவம். அந்த சக்தி இருக்கும்வரை இது சிவம். ஆற்றல் மிகுந்த விஷயம்.

அந்தச் சக்தியின் அசைவே, அலையே உங்களைக் காரியம் செய்யத் தூண்டுகிறது. நீங்கள் செய்யும் காரியத்தை செவ்வனே செய்வதற்கு அந்தச் சக்தியைப் புரிந்துகொள்ள வேண்டும். மனம் என்ற அந்தச் சக்தியைக் கவனித்தாலொழிய அதைப் புரிந்துகொள்ள முடியாது. ஒருவரோடு சேர்ந்து பழகினாலொழிய அவர் யார் என்று தெரியாது.

உங்கள் மனத்தோடு நீங்கள் பழகியிருக்கிறீர்களா? அதோடு சினேகிதம் கொண்டிருக்கிறீர்களா? அதைக் கவனித்திருக்கிறீர்களா? அதைக் கருணையோடு பார்த்திருக்கிறீர்களா? அதைக் கவலையோடு யோசித்திருக்கிறீர்களா?

ஆமாம். உங்களைப் பற்றி உங்கள் மனம் பற்றி நீங்கள் கவலையோடும், கருணையோடும் யோசிக்கத் தொடங்குவதே தியானத்தின் ஆரம்பம். இதற்கு மௌனம் ஒரு நல்ல வழி. மௌனத்துக்குத் தனிமைதான் மிகச் சிறந்த சாதனம்.

ஆனால் இந்தத் தனிமை மிகப்பெரிய கலவரத்தைக் கொடுக்கிறது. ஏன்? அது மரணத்தின் சாயலைக் கொண்டிருக்கிறது. யாருமே இல்லாது, எதுவுமே இல்லாது ஒரு வாழ்க்கை இருப்பின் அது மரணம்போலும் பயம் மிக்கது. இத்தனை பேர் இருக்கிறாங்க. பேசிப் பழகி புகுந்து புறப்பட்டு வெளியே வர வேண்டாமா? எதுக்கு இது பேசாமல் இருக்கிறது என்று கேட்கலாம்.

வாழ்க்கை என்பது தொடர்புகொள்ளுதல். பிறரைத் தொடர்புகொள்ளத் தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும். தான் யார் என்று தெரியாது, தனக்கு என்ன வேண்டும் என்று தெரியாது. தன்னுடைய குணம் தெரியாது மற்றவரோடு பழகினால் நாம் இடையறாது பிறரைத்தான் குறை சொல்லிக்கொண்டிருப்போமே தவிர, பிறர் குணங்களை அறியும் அமைதி நமக்கு வரவே வராது. அவரை எடைபோடும் கருவி நமக்குள் இருக்வே இருக்காது. அவரை அணுக வேண்டிய முறைபற்றி நமக்குத் தெரியவே தெரியாது. ஏனென்றால் நம்மைப் பற்றியே நமக்குத் தெரியாதபோது அடுத்தவரைப் பற்றிய எல்லாவித அபிப்பிராயங்களும், எடை போடல்களும் குப்பையாகத்தான் போகும்.

எனவே, மௌனம்தான், உங்களை அறிவதுதான், அதற்கான தனிமையில் இருப்பதுதான் மிகச் சிறந்த வழி.

*அதிகமாகப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞன் ஆகமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டான் தொலைக்காட்சியின் சாதனைத் தமிழன் விருது பெறுகிறார் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள்

– செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் –
*(தலைவர், டான் சாதனைத்தமிழன் விருதுத் தெரிவுக் குழு)*

"தனியொருவனுக்கு உணவில்லை எனில் செகத்தினை அழித்திடுவோம்" என்பது பாரதியின் கூற்று . உண்டி கொடுத்து உயிர்கொடுத்து உயர்ந்து நிற்கும் ஒருவர் சத்தம் சந்தடியின்றி எங்கள் மண்ணில் உயர் பணிகள் மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கையில் வருடம் 365 நாட்களும் மூன்று வேளை உணவளிப்பது மட்டுமன்றி ஆதரவற்ற உறவுகளுக்கு ஆதரவளித்து அவர்களை பராமரிப்பதுடன் சமூக மட்டத்தில் வசதியற்ற குடும்பங்களை இனம் கண்டு அவர்களின் மருத்துவம் கல்வி வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக தன்னை நிலைநிறுத்துவதென தொண்டுகளை ஆற்றித் தனிப்பெரும் தகைமையாளராக வாழும் மனிதர் இவர். சந்நிதிக் கந்தனின் நடமாடும் வடிவாகவே பலர் அவரைக் காண்கின்றனர். வீரமும் துணிவும் இயல்பாய் வளரும் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் செந்திவேல், மல்லிகா தம்பதியினருக்கு 31.08.1949 அன்று



மோகனதாஸ் எனும் நாமத்துடன் இம் மண்ணில் பிறந்த பெருந்தகையே இன்று சாதனைத் தமிழனாக உயர்ந்து நிற்கின்றார்.

செல்வச்சந்நிதியில் ஆனந்தாச்சிரமம் நடாத்திய மயில்வாகனம் சுவாமிகளை சிறுவயது முதல் தனது குருவாக ஏற்று அவர்காட்டிய வழியில் பணிகளை மேற்கொண்ட இவர். 1985 இல் சுவாமி பூரணம் அடையும் வரை அன்னதானம் இடும் பணியை அவரது

*மனத்தை அடக்கியவன் மகா வீரனாகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையின் கீழ் செவ்வனே செய்தார். தொடர்ந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைப் பாதிப்புகளுக்குப் பின்னர் 1988இல் சந்நிதியான் ஆச்சிரமத்தை நிறுவித் தன்பணிகளைத் தொடர்ந்தார். 05.05.1995இல் சந்நிதியான் ஆச்சிரமம் இன்றுள்ள இடத்தில் தனது பணிகளை மேற்கொள்ளத் தொடங்கிற்று.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதன்மையான பணி பசிப்பிணி போக்குதல் ஆகும். இன்று (2024) 65 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றார்கள். இதைவிட பெருநாள்களில் உடுபுடைவைகள் வழங்கியும் அவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இதைவிட கோவில் சூழலுக்கு வரும் அன்பர்கள் எவரெனினும் உணவு வழங்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றனர்.

கல்விப் பணியில் கரம் கொடுப்பதில் சமய பேதம் பாராது மோகன் சுவாமி உதவி வருகின்றார். பல்கலைக்கழக மாணவர்கள் நூற்றைம்பதிற்கும் மேற்பட்டோர் சமய சமூக பேதம் இன்றி மாதம்தோறும் 6000 ரூபா வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இதைவிட கற்றல் தேவையுடையோருக்கு துவிச்சக்கரவண்டிகள் புத்தகப் பைகள் போன்ற - ஏற்ற உதவிகளை வழங்கி அவர்களுக்கு உதவுகின்றார்.

2014ஆம் ஆண்டில் மலையகத்தில் மீரியப்பெத்தவில் ஏற்பட்ட மண்சரிவின் போது முதன்முதலாக அந்த மக்களைத் தேடி மோகன் சுவாமியின் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம உதவிகளுடன் சென்ற பாரவூர்திகளே முதலில் சென்றன. அன்று தொடக்கம் ஆச்சிரமப் பணிகள் இலங்கையின் பல பாகங்களுக்கும் விரிவுற்று வருகின்றது. பிரதேச வேறுபாடு இன்றி வாழ்வாதாரப் பணிகளை வழங்கி வருகின்றார். நலிவுற்ற மக்கள் பலர் இதனால் பெருநன்மை அடைந்து வருகின்றனர்.

ஆச்சிரமத்தினால் நடத்தப்படும் நடமாடும் மருத்துவ சேவைகள் ஊடாகப் பலர் நன்மை அடைகின்றனர். இதைவிட வைத்தியசாலைகளின் மருந்துத் தேவைகளையும் குறிப்பிடத்தக்க அளவில் தீர்ப்பதற்குத் தன்னாலான பங்களிப்புகளை நல்கி வருகின்றார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் ஞானச்சுடர் 25 ஆண்டுகளைக் கடந்து மாதா மாதம் தொடர்ச்சியாக ஒழுங்காக வெளிவருகின்ற ஆன்மீக சஞ்சிகையாக விளங்கு கின்றது. உலகெங்கும் ஆன்மீக ஞான ஒளியைத் தன் எழுத்துகளால் பரப்பி வருகின்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையில் வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் பங்கேற்றவர்கள் இன்று பிரபல சொற்பொழிவாளர்களாகவும் பாடகர்களாகவும் விளங்குகின்றனர்.

ஆன்மீகப் பணி என்பது கோவிலை மையப்படுத்திய பணி என்பதற்கு அப்பால் குடிகளைத் தழுவிய பணிகள்தான் - அதிலும் சமய பேதம் பாராது மனிதத்தை உயர்வாகப் போற்றும் பணிகள்தான் என்று நிருபித்து வாழ்ந்து காட்டுகின்றார்.

சேவையால் சிறப்புற்ற இச்செம்மலுக்கு யாழ் மாநகராட்சி சபையின் யாழ் விருது (2018) தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் (2017) என ஐம்பதிற்கும் மேற்பட்ட கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் டான் தொலைக்காட்சி தனது உயரிய விருதான சாதனைத் தமிழனாக இப்பெருந்தகையைக் கௌரவிக்கின்றது.

*சொர்க்கம் தாயின் இரு பாதங்களுக்கு அடியில் இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி அறக்கட்டளை நிறுவுனர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் (2018), திருமறைக்கலாமன்ற இயக்குநர் (மறைந்த) அருட்கலாநிதி நீ. மரியசேவியர் (2019), நாடகத்துறைப் பேராசிரியர் சி. மௌனகுரு (2020) முல்லை மண்ணின் தொழில் முயற்சியாளர் சாஜிராணி (2021), யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் (2022) இசையமைப்பாளர் கண்ணன் (2023) என்ற வரிசையில் 2024 ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன் விருதை கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்குவதில் டான் குழுமம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கின்றது.

---

### வாழ்க நம் சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே

வாழ்க நம் ஆச்சிரமம் வாழ்க நம் ஆச்சிரமம் வாழிய வாழியவே
சந்நிதியான் சந்நிதியில் வரலாறு படைக்கும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே.

அன்றுபல ஞானிகள் யோகிகள் சித்தர்கள்
ஆரம்பித்த ஆச்சிரமம் வாழியவே
இன்றெங்கள் மோகன் சுவாமிகள் காத்திடும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே!

(சந்நிதியான் ஆச்சிரமம்...

சந்நிதியின் வாசல்வந்து வேண்டிடும் அனைத்தையும்
தரும்பெரும் ஆச்சிரமம் வாழியவே
தன்னலம் இன்றிப் பிறர்தொண்டு புரியும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே!

(சந்நிதியான் ஆச்சிரமம்...

அன்னதானக் கந்தனென்ற பெயரினைக் காத்திட
அன்னமிடும் ஆச்சிரமம் வாழியவே
எந்நாளும் எல்லோர்க்கும் எல்லாமும் வழங்கிடும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே!

(சந்நிதியான் ஆச்சிரமம்...

சைவம் கலைபண்பாடு கல்வியென வளர்க்கும்
புதிர்பூத்த ஆச்சிரமம் வாழியவே
நாடிவரும் அடியார்க்குக் கோடிநலன் குவிக்கும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே!

(சந்நிதியான் ஆச்சிரமம்...

தொண்டைமானாறு செல்வச் சந்நிதிப் பதியதில்
தொண்டாற்றும் ஆச்சிரமம் வாழியவே
ஞானச்சுடர் ஏற்றி ஞாலத்திற்கு ஒளிதரும்
சந்நிதியான் ஆச்சிரமம் வாழியவே!

(சந்நிதியான் ஆச்சிரமம்...

*-ஆசுகவி-*

*அன்பு கொள்கையில் இருந்தால் போதாது. செய்கையிலும் இருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வவுனியா - வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக நிர்வாக பிரிவில் உள்ள செட்டிக்குளம், மெனிக்பாம் ஞானப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் உள்ள 67 மாணவர்களுக்கு 100,500 ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன.




உபாதியுடையவன் ஜீவன். உபாதி நீங்கினால் அவனே பரம் ஆகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - நெடுங்கேணி, கரடிப்பிலவு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 56 குடும்பங்களுக்கு 280,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - வற்றாப்பளை, முள்ளியவளை, கேப்பாப்பிலவு, ஐயனார் குடியிருப்பு, ரெட்பானா, விஸ்வமடு ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 165 குடும்பங்களுக்கு 495,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் மத்தி பிரதேசத்தில் உள்ள J/142 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 48 குடும்பங்களுக்கும், நல்லூர் சங்கிலியன் தோப்பு J/ 109 கிராம சேவகர் பிரிவில் உள்ள 22 குடும்பங்களுக்கும் 350,000 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.



புலனடக்கம் இல்லாத சாஸ்திர ஞானத்தால் பயன் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கந்தரோடை, இக்கிரானை கிராம சேவையாளர் பிரிவுகளான J/212, J/200 ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 75 குடும்பங் களுக்கு 375,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - பழம்பாசி, கரடிப்பிலவு, 17ஆம் கட்டை, மாமடுச்சந்தி, பெரிய இத்திமடு, தட்டாமலை, தண்டுவான் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 65 குடும்பங்களுக்கு 325,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப் பட்டன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கோப்பாய் பிரதேச செயலகம் உரும்பராய் தெற்கு பிரதேசத்தில் உள்ள J/ 265 கிராம சேவையாளர் பிரிவான யோகபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு 785,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.





யாழ்ப்பாணம் அராலி கிழக்கு, அராலி தெற்கு, மத்தி கிராம சேவையாளர் பிரிவுகளான J/163, J/162, J161 பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 57 குடும்பங்களுக்கு 285,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.



நற்சிந்தனை, உணர்வோடு கூடியதாக அமையும்போது வலுப்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை - 1ஆம் கட்டை, வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ். லியனகே என்பவரின் வீட்டின் கூரை வேலைக்கான செலவாக 100,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு 145,200 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

↓↓





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடர்கால நிவாரணப் பணிகளின் வரிசையில் யாழ்ப்பாணம் - மல்லாகம், குளமங்கால் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு 200,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் கார்த்திகை மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்




கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லாகம் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக கிணறுகள் தூய்மைப்படுத்துவதற்காக 01 பரல் குளோரின் வாங்குவதற்குரிய நிதியும், யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த ஸ்ரீ யமுனாம்பிகா சமேத சிவ சங்கரனார் திருக்கோவில் ஆலய கட்டிடப்பணிக்காக 200,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.



எல்லாம் இறைவன் செயல் என்ற உணர்வில் நிலைத்திருப்பதே தவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் – 2024

– தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம் –

*சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் நேரடி வழிகாட்டலில் வடக்கு, கிழக்கு, மலையகம் என பரந்துபட்ட பகுதிகளில் 01.01.2024 தொடக்கம் 30.06.2024 வரையான காலப்பகுதிகளில் வீடு அற்றவர்களுக்கான வீடு, அறநெறிப் பாடசாலைகளுக்கான கட்டிடம், வாழ்வாதாரச் செயற்றிட்டம், கல்விச் செயற்றிட்டம், (மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி, கற்றல் உபகரணங்கள், கல்விச் செயலமர்வுகள்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் செயற்றிட்டம், மருத்துவமனைகளுக்கான அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள், மலசலகூட கட்டுமானம், ஆலயங்களுக்கான நிதி உதவிகள், அறநெறிப்பாடசாலைகளுக்கான செயற்றிட்டங்கள் என பல பரிமாணங்களில் 17,087,626 ரூபா (ஒரு கோடியே எழுபது லட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்றி இருபத்தாறு) நிதிப்பங்களிப்பில் சமூகநலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.*

*(மாதாந்தம் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவுதொகை உள்ளடக்கப்படவில்லை)*

**02.01.2024 செவ்வாய்க்கிழமை**

அம்பாறை மாவட்டம் பாணம வடக்கு, பாணம கிழக்கு, அபயசிங்கபுர கிராமங்களில் 01ஆம் கட்டமாக வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு 700,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டன.

**05.01.2024 வெள்ளிக்கிழமை**

05 மாணவர்களுக்கு 282,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) வட்டுக்கோட்டை, வட்டு. தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த யா/ யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவி

02) வட்டுக்கோட்டை, வட்டு. தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 06இல் கல்வி கற்கும் யா/ வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய மாணவன்

03) புத்தூர், புத்தூர் மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 07இல் கல்வி கற்கும் யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி மாணவி

04) சுழிபுரம் பொன்னாலை மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 11இல் கல்வி கற்கும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மாணவன்

05) சுழிபுரம், மூளாய் தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 08இல் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவன்.

*தன்னை அனைத்துடனும் ஐக்கியப்படுத்துபவன் பணிவுடையவன் ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08.01.2024 திங்கட்கிழமை**

அம்பாறை மாவட்டம் பாணம வடக்கு, பாணம கிழக்கு, பாணம தெற்கு கிராமங்களில் 2ஆம் கட்டமாக வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு 425,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**10.01.2024 புதன்கிழமை**

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாமுலை பகுதியைச் சேர்ந்த 52 குடும்பங்களுக்கும்,

வவுனியா, கோவில்புளியங்குளம், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 71 குடும்பங்களுக்கும் 615,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**19.01.2024 வெள்ளிக்கிழமை**

188,000 ரூபா பெறுமதியான 04 துவிச்சக்கரவண்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

01) உடுவில், உடுவில் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 12இல் கல்வி கற்கும் யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி

02) தெல்லிப்பளை, வறுத்தளைவிளான் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 08இல் கல்வி கற்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி

03) குடத்தனை, அம்பன் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 06இல் கல்வி கற்கின்ற அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவி.

04) கரவெட்டி, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த தரம் 06இல் கல்வி கற்கின்ற கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன்

**02.02.2024 வெள்ளிக்கிழமை**

01) கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையம் வலுவிழப்புடன் கூடிய நபர்களின் சமூகப்பணி நிறுவனத்தின் கட்டிட கட்டுமானப் பணிக்காக 230,000 ரூபா பெறுமதியான 100 சீமெந்து பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.

02) பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள தொண்டைமானாறு தெற்கு கிராமத்தில் உள்ள வீட்டுத்தோட்ட பயனாளிகளிற்கு நாற்றுக்கள், விதைப்பைக்கற்றுக்கள் வழங்குவதற்காக 20,000 ரூபா நிதி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது.

**04.02.2024 ஞாயிற்றுக்கிழமை**

01) முல்லைத்தீவு மாவட்டத்தை உடைய கரடிப்பிலவு, பழம்பாசி, மாமடு தண்டுவான், 17ஆம் கட்டை கிராமங்களைச் சேர்ந்த 80 குடும்பங்களுக்கு 352,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

02) மு/ தண்டுவான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 05 மாணவர்களுக்கு 235,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*நல்வாழ்க்கைக்கு தகுந்த செயலை வரையறுத்துக் கூறுவது அறம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய இத்திமடு கிராமத்தைச் சேர்ந்த தரம் 07, தரம் 08 மாணவர்கள்
பண்டாரிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த தரம் 11 மாணவி
தட்டாமலை கிராமத்தைச் சேர்ந்த தரம் 07 மாணவன்
கரடிப்பிலவு கிராமத்தைச் சேர்ந்த தரம் 10 மாணவன்

03) வாழ்வாதார உதவியாக விவசாய செய்கைக்காக முள்ளியவளை, வற்றாப்பளை கிராமத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 70,000 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் (வாட்டர்பம்) வழங்கப்பட்டது.

**16.02.2024 வெள்ளிக்கிழமை**

01) யா/ ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக இணைந்த தரம் 01 வகுப்பைச் சேர்ந்த 16 மாணவர்களுக்கு 40,000 ரூபா பெறுமதியான காலணிகள் வழங்கப்பட்டன.

02) புத்தளம், சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்தினி அம்மன் அறநெறிப் பாடசாலை கட்டிட கட்டுமானத்திற்கான கூரைப் பொருளிற்காக 190,000 ரூபா வழங்கப்பட்டது.

**20.02.2024 செவ்வாய்க்கிழமை**

கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு 565,600 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டன.

**21.02.2024 புதன்கிழமை**

தொண்டைமானாற்றைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த 526 மாணவர்களிற்கு 676,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**22.02.2024 வியாழக்கிழமை**

யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 01இல் புதிதாக இணைந்த 46 மாணவர்களுக்கு 52,000 ரூபா பெறுதியான தண்ணீர்ப் போத்தல், கொப்பிகள் வழங்கப்பட்டன.

**23.02.2024 வெள்ளிக்கிழமை**

01) திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவேகானந்தா இந்து மகளிர் கல்லூரி, விவேகானந்தா தேசிய பாடசாலை, இந்து மகா வித்தியாலயம், உவர்மலை விவேகானந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 10 மாணவர்களிற்கு 70,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

02) யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் தொல்லியல் மற்றும் கலாசார சுற்றுலா கற்கையினை மேற்கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு பகுதியினரின் கோரிக்கைக்கு அமைவாக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**01.03.2024 வெள்ளிக்கிழமை**

01) 266,000 ரூபா பெறுமதியான 05 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*அகங்காரம் ஆசையைப் பெருக்குகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளாய் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 08ல் கல்வி கற்கும் மாணவி

கண்ணகை அம்மன் புங்குடுதீவைச் சேர்ந்த புங்குடுதீவு மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி

சின்னக்கடற்கரை, தொண்டைமானாற்றைச் சேர்ந்த தரம் 06இல் கல்வி கற்கும் மாணவி

யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தில் தரம் 08இல் கல்வி கற்கும் 02 மாணவர்கள்.

02) வடமராட்சி ஊடக இல்லத்திற்கு 110,000 ரூபா பெறுமதியான மடிக்கணினி வழங்கப்பட்டது.

**05.03.2024 செவ்வாய்க்கிழமை**

01) முல்லைத்தீவு தண்டுவான் மகா வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 29 மாணவர்களுக்கு 02 மாதங்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக உணவுப் பொருட்கள் (அரிசி, பருப்பு, சோயா, மரக்கறி, எண்ணெய், தூள், உப்பு, புளி) என்பன வழங்கப்பட்டது.

02) சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நெடுங்கேணி வெடுக்குநாறிமலை சிவாலயத்திற்கு உணவுப் பொருட்கள் அரிசி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா, தூள், உப்பு, புளி, சீனி, தேயிலை ஆலய நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

03) 320,000 ரூபா பெறுமதியான 06 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

ஐயனார் குடியிருப்பு, 01ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த கலைமகள் வித்தியாலயத்தில் தரம் 06இல் கல்வி கற்கும் மாணவி

வற்றாப்பளை, முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் சாதாரணதரத்தில் கல்வி கற்கும் மாணவன்

பொன்னகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் முல்லைத்தீவு முறுகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த அறநெறி ஆசிரியர், மற்றும் பொன்னகர் மத்தி பிரதேசத்தைச் சேர்ந்த 02 அறநெறி ஆசிரியர்கள்.

சுவாமி விவேகானந்தா அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆனை விழுந்தான் பிரதேசத்தைச் சேர்ந்த அறநெறி ஆசிரியர்

**06.03.2024 புதன்கிழமை**

01) மலையகம் பிராந்தியத்தில் உள்ள பண்டாரவளை கிரேக் கீழ் பிரிவு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 27 குடும்பங்களுக்கு 95,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டன.

02) மட்டக்களப்பு ஆதீனத்திற்கு சிவராத்திரி நிகழ்வை முன்னிட்டு 30,000 ரூபா நிதி நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

**08.03.2024 வெள்ளிக்கிழமை**

108,000 ரூபா பெறுமதியான 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*அகங்காரத்தை அழிப்பவன் யாண்டும் இன்பத்திலிருக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) அம்பன் கிழக்கு, குடத்தனை பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் யா/ அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி

02) இணுவில் பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி

**11.03.2024 திங்கட்கிழமை**

வவுனியா - கோவில்புளியங்குளம் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற 70 மாணவர்களுக்கும், வவுனியா கணேபுரம் அறநெறிப் பாடசாலையில் (சித்தி விநாயகர்) கல்வி கற்கின்ற 65 மாணவர்களுக்கும் 140,000 ரூபா பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டது.

**15.03.2024 வெள்ளிக்கிழமை**

105,000 ரூபா பெறுமதியான 02 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தில் தரம் 08, தரம் 11இல் கல்வி கற்கும் 02 மாணவர்களுக்கே வழங்கப்பட்டது.

**20.03.2024 புதன்கிழமை**

01) முள்ளியவளை, வற்றாப்பளையைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 05 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு காரைநகரைச் சேர்ந்த அமரர் க. பத்மாவதி ஞாபகார்த்தமாக 12 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பிலும் ஆச்சிரமத்தின் 5 இலட்சம் ரூபா நிதியிடலிலும் 17 இலட்சம் ரூபா பெறுமதியான வீடு கையளிக்கப்பட்டது.

02) முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு திம்பிலி ஆரம்ப பாடசாலைக்கு 290,000 ரூபா பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிக்கப்பட்டது.

**25.03.2024 திங்கட்கிழமை**

யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்கள் வாங்குவதற்காக பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**29.03.2024 வெள்ளிக்கிழமை**

01) யா/ வலி. தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வுக்காக 20,000 ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டன.

02) நடுத்தெரு, தொண்டைமானாற்றைச் சேர்ந்த முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு மருத்துவ செலவுக்காக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

03) மலையகம் - பதுளையைச் சேர்ந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிக்கு 90,000 ரூபா பெறுமதியான மடிக்கணனி வழங்கப்பட்டது.

*தனிமையில் இன்புற்றிருப்பவன் யோகி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கோரிக்கைக்கு அமைவாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விபத்து, அவசர சிகிச்சை பிரிவுக்கு தேவையான கழிவுகளை அகற்றுவதற்கு 351,026 ரூபா பெறுமதியான கொள்கலன்கள் (30லீற்றர் - 40, 70லீற்றர் - 20) வழங்கப்பட்டன.

05) பண்டாரவளை ஹெல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுக்காக அன்னதானம் வழங்குவதற்காக 200,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**05.04.2024 வெள்ளிக்கிழமை**

01) பெரியவிளான் இளவாலை பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு மலசலகூடம் அமைப்பதற்காக 150,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

02) கெருடாவில், தொண்டைமானாற்றைச் சேர்ந்த இளந்தளிர் அமையத்திற்கு சித்திரைக் கொண்டாட்ட நிகழ்வுக்காக 35,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**07.04.2024 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா - கூமாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விசேட தேவைக்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 170,000 ரூபா பெறுமதியில் வீட்டிற்கான கூரை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

**12.04.2024 வெள்ளிக்கிழமை**

புத்தளம் - சேனைப்பிளவு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**16.04.2024 செவ்வாய்க்கிழமை**

முத்துஐயன்கட்டு ஜீவநகர் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பயன்பாட்டிற்காக மலசலகூடம் அமைப்பதற்காக 150,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**21.04.2024 ஞாயிற்றுக்கிழமை**

திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரி முத்துக்குமார சுவாமிகள் அறநெறிப் பாடசாலைக்கு 22 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் புதிய கட்டிடம் கட்டி வழங்கப்பட்டது.

**27.04.2024 சனிக்கிழமை**

27, 28, 29ஆம் திகதிகளில் மலையகம் பண்டாரவளை வலயத்திற்குட்பட்ட ப/ பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி, கிரேக் ஸ்ரீ சக்தி கல்லூரி ஆகிய நிலையங்களில் 175 மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளில் யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர் குழாம் ஊடாக திரு இரா. செல்வவடிவேல் ஆசிரியர் தலைமையில் கல்விச் செயலமர்வு இடம்பெற்றது.

*அஞ்ஞானத்தில் உதிக்கும் விவேகமும் வைராக்கியமும் நிலைத்திரா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03.05.2024 வெள்ளிக்கிழமை**

135,000 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) குடத்தனை கிழக்கு, குடத்தனை பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 10இல் யா/ அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் தாய் தந்தையை இழந்த மாணவன்

02) கொடிகாமம் வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 04இல் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன்

03) வீமன்காமம் தெற்கு, தெல்லிப்பளையைச் சேர்ந்த தரம் 05இல் வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி

04) போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு 40,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

05) தொண்டைமானாறு இந்து அபிவிருத்தி நிலையத்தின் கோரிக்கைக்கு அமைவாக அறநெறி மாணவர்களை திருக்கேதீச்சரம் அழைத்து செல்வதற்காக நிதி செலவுக்காக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

06) மலையகம் பண்டாரவளை, அப்புத்தளை விஹாரகலை தமிழ் வித்தியாலயத்திற்கு படிக்கட்டு கட்டுமானப் பணிக்காக 100,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**17.05.2024 வெள்ளிக்கிழமை**

பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட சக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார தேவை கருதி 45,500 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டன.

**21.05.2024 செவ்வாய்க்கிழமை**

136,500 ரூபா பெறுமதியான 03 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

01) உடையார்கட்டு, வெள்ளைப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த தரம் 10இல் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 02 மாணவிகள்

02) கிளிநொச்சி சின்மயா மிசன் சுவாமிகளுக்கு சமூக நலத் திட்டங்களை இலகுவாக மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டது.

**26.05.2024 ஞாயிற்றுக்கிழமை**

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 750,000 ரூபா நிதிப்பங்களிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது.

**31.05.2024 வெள்ளிக்கிழமை**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக என்புமச்சை மாற்று சிகிச்சை ஆரம்பிக்கத் தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 525,000 ரூபா நிதி வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது.

*மனத்தை வெல்லுவதே வெற்றி என்று யோகி நினைக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02.06.2024 ஞாயிற்றுக்கிழமை**

வவுனியா கணேசபுரம் சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலைக்கு 13 இலட்சம் நிதிப்பங்களிப்பில் கட்டிடம் அமைத்துக் கையளிக்கப்பட்டது.

**07.06.2024 வெள்ளிக்கிழமை**

கெருடாவில் தெற்கு, சூளைப்பிட்டி வைரவர் தேவஸ்தானத்திற்கு கட்டுமானப் பணிக்காக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**12.06.2024 புதன்கிழமை**

பண்டாரவளை - சென் ஜேம்ஸ் தோட்டம் மத்திய பிரிவு ஆலிஎல முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வுக்காக 50,000 ரூபா நிதி வழங்கப்பட்டது.

**19.06.2024 புதன்கிழமை**

திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு பாடசாலை பாதுகாப்பு வேலி முழுமையாக அமைப்பதற்காக டென்மார்க் மாதவமேனன் 790,000 ரூபா நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்டது.

**23.06.2024 ஞாயிற்றுக்கிழமை**

அம்பாறை தம்பிலுவில் சைவநெறிக்கூடத்துக்கு 550,000 ரூபா பெறுமதியான உழவு இயந்தரப் பெட்டி வழங்கப்பட்டது.

பின்தங்கிய கிராமங்களுக்கான நீர் விநியோகம். கதிர்காம பாதயாத்திரையினர்க்கான உகந்தை காட்டுப் பகுதிகளுக்கான நீர் விநியோகங்களை இலகுபடுத்துவதற்காக வழங்கப்பட்டது.

வருடாந்தம் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் செல்லும் பாத யாத்திரையினர்க்கு (125 பேர்) உணவுப் பொருட்கள், குளிர்பானங்கள், மருத்துவப் பொருட்கள், சவர்க்கார வகைகள், சத்துமாப் பைக்கற்றுக்கள், பழவகைகள் என்பன பல இடங்களில் 1,025,000 ரூபா நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்டன.

**12.05.2024 ஞாயிற்றுக்கிழமை**

துர்க்காபுரம் படித்த மகளிர் திட்டம் கிராமத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயம்
தேனீர் பொருட்கள், மருத்துவப் பொருட்கள்.

**15.05.2024 புதன்கிழமை**

தருமபுரம், நெத்தலியாறு பிள்ளையார் ஆலயம்
சத்துமா பைக்கற்றுக்கள், பழவகைகள்.

**21.05.2024 செவ்வாய்க்கிழமை**

முல்லைத்தீவு தண்ணீரூற்று பிள்ளையார் ஆலயம்
சத்துமா பைக்கற்றுக்கள், பிஸ்கற் வகைகள்

*இன்பம் தன்னிடத்திலிருந்து வருவதாக உணர்வது ஞானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27.05.2024 திங்கட்கிழமை**

திருகோணமலை குச்சவெளி தான்தோன்றி சித்திவிநாயகர் ஆலயம்
மருத்துவப் பொருட்கள், பிஸ்கற் வகைகள்

**05.06.2024 புதன்கிழமை**

திருகோணமலை வெருகல் முருகன் ஆலயம்
சவர்க்கார வகைகள்

**11.06.2024 செவ்வாய்க்கிழமை**

மட்டக்களப்பு கல்லடி பேச்சியம்மன் ஆலயம்
குளிர்பானங்கள், பிஸ்கற் வகைகள்

**23.06.2024 ஞாயிற்றுக்கிழமை**

அம்பாறை பொத்துவில் குண்டுமடு ஸ்ரீ முருகன் ஆலயம்
குளிர்பானங்கள், பிஸ்கற் வகைகள்

**30.06.2024 ஞாயிற்றுக்கிழமை**

உகந்தை முருகன் ஆலயம்
உணவுப் பொருட்கள், நீர் விநியோகம்.

(உகந்தை - கதிர்காமம் வரையான காட்டுப்பகுதியில் சமைத்து உண்பதற்காக உணவுப் பொருட்களும் நீர் விநியோகங்களும்)

---

சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் அறப்பணிகளுக்கும், கடந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின்போதும் (மழை வெள்ளம்) புலம்பெயர் தேசங்களில் இருந்து பேருதவி புரிந்ததோடு தொடர்ந்தும் எமது ஆச்சிரம பணிகளுக்கு அனுசரனையாகவிருக்கும் அன்பர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

| | |
|---|---|
| **திரு குமார்** | **கனடா** |
| **திரு கனகசபேசன்** | **கனடா** |
| **மலர் ஸ்ரோர்ஸ்** | **அவுஸ்திரேலியா** |
| **பஞ்சாட்சரம் சின்னத்துரை** | **கனடா** |
| **திரு சதாசிவமூர்த்தி** | **கனடா** |
| **பாலசுப்பிரமணியம் சரவணமுத்து** | **சுவிஸ்** |
| **திரு கிருஷாந்** | **கட்டார்** |
| **திரு ஜெயா** | **லண்டன்** |
| **ம. ஸ்ரீகாந்தன்** | **அச்சுவேலி** |

*பரமாத்மாதான் தனக்குச் சொந்தம் என நினைப்பவன் ஞானி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

**03.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "மங்கள இசை"

வழங்குபவர்கள்:- *L.S.* பாலேந்திரன் குழுவினர்

---

**10.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "குமரகுருதாச சுவாமிகளும் பாடல்களும்"

வழங்குபவர் :- திருமதி சண்முகவடிவு தில்லைமணி அவர்கள்

[சைவப்புலவர்]

---

**17.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**24.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "திருவைந்தெழுத்து"

வழங்குபவர் :- திருமதி பரமேஸ்வரி சிவனொளிபாதம் அவர்கள்

[இளை. ஆசிரிய ஆலோசகர்]

---

**31.01.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சு. தேவமனோகரன் அவர்கள்

[சைவப்புலவர்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

**325ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org